# சேவா வாணி

ஜனவரி - 2025



ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)

தமிழ்நாடு - தெற்கு

# பிரேம தாரா

(பகவான் பாபா தனது மாணவர்களுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பு)

## சாயி ஏன் குழந்தைகளை நேசிக்கிறார்?

*(இடம்: பிருந்தாவனம்)*

**அன்பார்ந்த குழந்தைகளே,** *(தொடர்ச்சி ...)*

இந்த நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள். தவிர, உங்களால் முடிந்த வரையில் பிற குழந்தைகளுக்கு உதவி செய்யுங்கள். பெற்றோர்களுக்கு தேவை இருக்கும் போது அவர்களுக்கு உதவி செய்யுங்கள். அவர்களை மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்யுங்கள். உங்களைப் பற்றியும் உங்கள் நற்பண்புகள் பற்றியும் அவர்களை பெருமை கொள்ளச் செய்யுங்கள்.

உங்கள் குரு உங்களுக்கு கற்பிக்கும் பாடங்களை நன்கு கற்றுக் கொள்ளுங்கள். எதை செய்ய வேண்டும், எதை செய்யக்கூடாது என்பது பற்றிய அவரது அறிவுரைகளை பின்பற்ற முயற்சி செய்யுங்கள். வாழ்க்கையின் நீண்ட பயணத்தின் முதல் கட்டத்தில் நீங்கள் இருக்கிறீர்கள்.



உங்களுக்கு பல பெரும் பணிகள் உள்ளன. உங்கள் தாய் நாட்டினை மகிழ்ச்சியுடனும் செல்வத்துடனும் இருக்கச் செய்ய நீங்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் பல உள்ளன.

...(தொடரும்)

ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம், தமிழ்நாடு தெற்கில் இருந்து **3** பிரிவுகளிலும் மொத்தம் **130** தனித்துவமான செயல்பாடுகள் **ஜனவரி 2025** நடந்தன

| ஆன்மிகப் பிரிவு | சேவைப் பிரிவு |
|---|---|
| **65** | **45** |

| கல்விப் பிரிவு |
|---|
| **20** |

# மஹிளா தினம்

தஞ்சாவூர் 19.1.25 137 பயனாளிகள்

மகிளா தின சிறப்பு நிகழ்ச்சிகளாக 19-01-25 மஹர்நோன்புச்சாவடி சமிதி சார்பாக தூய்மைப்பணி மற்றும் சிறப்பு நாராயண சேவை 137 நபர்களுக்கு variety rice பிரசாதம் வழங்கப்பட்டது.





# லலிதா சஹஸ்ரநாம பாராயணம்

தஞ்சாவூர் 17.1.25 25 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் அருளால் லலிதா சஹஸ்ரநாம பாராயணம் கும்பகோணம் சமிதியில் தை முதல் வெள்ளியை ஒட்டி 2025 ஜனவரி 17 அன்று நடைபெற்றது. 25 மகிளாக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



# இலவச கண் சிகிச்சை முகாம்

தஞ்சாவூர் 18.1.25 **220** பயனாளிகள்

**25** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் மகத்தான அருளால் ஜனவரி 8, 2025 மற்றும் ஜனவரி 18, 2025 அன்று, தஞ்சாவூர் மஹர்நோன்புச்சாவடி சமிதியால் 31வது இலவச கண் சிகிச்சை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. 220 நோயாளிகள் சேர்க்கப்பட்டனர், 73 பேர் கண்புரை அறுவை சிகிச்சைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். 10 பேருக்கு வஸ்திர தானம் செய்யப்பட்டது, அனைவருக்கும் நாராயண சேவையும் செய்யப்பட்டது. நமது சாய் அமைப்புகளின் மாவட்டத் தலைவர் பங்கேற்றார். 15 ஆண் சேவாதளத் தொண்டர்களும், மற்றும் 10 மகிளாக்கள் பங்கேற்றனர். நமது அன்பான பகவானுக்கு நன்றி.



## பிரேம தரு

தஞ்சாவூர் 26.1.25 **28** சேவாதளத்தொண்டர்கள்

நமது அன்பிற்குரிய பகவானின் அருளால் இன்று நமது கும்பகோணம் சமிதி சார்பாக கொண்டங்குடி கிராமத்திற்கு அருகிலுள்ள அரசு பொறியியல் கல்லூரியில் 50 (ஐம்பது) மரக்கன்றுகள் நடப்பட்டன. மாவட்டத் தலைவருடன், சமிதியின் நிர்வாகிகள் 28 பேர் கலந்து கொண்டனர். ஆண் சேவாதள தொண்டர்கள்கள் 10, மகிளா சேவாதள தொண்டர்கள் 06 குருப் 04 பெண்கள்= 04, குருப் 04 சிறுவர்கள்= 08 , கல்லூரி தலைவர், முதல்வர் மற்றும் NCC மாணவர்களுடன் அனைத்து ஆசிரியர்களும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர். பகவானுக்கு நன்றி



## முதியோர் இல்ல வருகை

தஞ்சாவூர் 26.1.25 **38** சேவாதளத்தொண்டர்கள்

26-01-2025 குடியரசு தினமானதால் கும்பகோணம் சமிதியினர் நடுவக்கரை ஸ்ரீ சத்திய சாய் முதியோர் இல்லத்தில் சிறப்பு பஜனை நடத்தினர். 38 சாய் பக்தர்கள் (பெண்கள் 20, ஆண்கள் 12 மற்றும் 6 பாலவிகாஸ் மாணாக்கர்கள்), 40 பொதுமக்கள் மற்றும் முதியோர் இல்ல உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பாலவிகாஸ் மாணவர்கள் முதியவர்களிடம் அன்பான விசாரணைகள் நடத்தினர்.

இதைப்போல் வலங்கைமான் அன்னை அரவிந்தர் முதியோர் இல்லத்தில் உள்ள 32 உறுப்பினர்களுக்கும் மெஹர்நோன்புச்சாவடி சமிதி சார்பில் முழு உணவு வழங்கப்பட்டது.



# ஸ்ரீநிவாச பெருமாள் கல்யாண உத்ஸவம்

தஞ்சாவூர் | 26.1.25 | 500 பயனாளிகள் | 40 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் மிகப்பெரும் கருணையினாலே ஸ்ரீனிவாச திருக்கல்யாண மகோத்சவம் மிகவும் சீரும் சிறப்புமாக இனிதே நடைபெற்றது தஞ்சை திருவாரூர் மாவட்டத்தின் அனைத்து சமிதிகளில் இருந்தும் கன்வீனர் மற்றும் உறுப்பினர்கள்,நமது மாவட்டத் தலைவருடன் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். சுமார் 40 சேவாதள தொண்டர்களும், 500க்கும் மேற்பட்ட பொதுமக்களும் கலந்துகொண்டனர்





# சமத்துவ பொங்கல்

தஞ்சாவூர் 12.1.25 **115** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் 100வது பிறந்தநாள் கொண்டாட்டங்கள் இனிதே தொடங்கின. முத்தையாபுரத்தில் சமத்துவ பொங்கல் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

1. பாலவிகாஸ் குழந்தைகளின் நிகழ்ச்சிகள்
2. மகிளாஸ்களுக்கான கோலப் போட்டி
3. பாலவிகாஸ் நான்காம் பிரிவிற்கான போட்டிகள்

பகவானின் பெரும் கருணையினால் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. பங்கு கொண்ட அனைவருக்கும் பகவானின் பேரருள் கிடைக்க பிரார்த்தனை செய்வோம்.

இனிவரும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறோம். கலந்துகொண்ட சேவாதள தொண்டர்கள்:: 30, பாலவிகாஸ் குழந்தைகள்:: 35, பெற்றோர்கள் மற்றோர்கள்:: 50.

# பாலவிகாஸ் தின விழா

தஞ்சாவூர் 1.1.25 **220** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் அபரிமிதமான அருளால் 01-01-2025 அன்று, தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் சமிதியில் பாலவிகாஸ் தினம் நடத்தப்பட்டது. கிட்டத்தட்ட 55 மாணவர்கள் கலாச்சார நிகழ்ச்சியில் பங்கேற்றனர். 150க்கும் மேற்பட்ட பக்தர்கள், பொதுமக்கள் கலாச்சார நிகழ்ச்சிகளை ரசித்தனர். அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது.

## வைகுண்ட ஏகாதசி சேவை

தஞ்சாவூர் | 10.1.25 | 30 சேவாதளத்தொண்டர்கள்

30 சேவாதளத் தொண்டர்கள் இன்றைய வைகுண்ட ஏகாதசி சேவையில் கலந்து கொண்டு இறையருள் பெற்றனர்.





# பாகவதங்களைப் போற்றுதல்

தஞ்சாவூர் | 11.1.25 | 19 பயனாளிகள் | 10 சேவாதளத்தொண்டர்கள்

தஞ்சை மகர்நோம்புச்சாவடி சமிதியில்.. காலை நகரசங்கீர்த்தனத்தை தொடர்ந்து கூடார வல்லி திரு நாளை முன்னிட்டு அப்பகுதி பாகவதர்களுக்கு உபச்சார சேவை நடைபெற்றது. பகவானின் பேரருளால் இச் சேவை இனிதே நடைபெற்றது



# குத்துவிளக்கு பூஜை

தஞ்சாவூர் 24.1.25 36 சேவாதளத்தொண்டர்கள்

தை வெள்ளியை முன்னிட்டு திருவாரூர் சமிதியில் 24.01.2025 அன்று திருவிளக்கு பூஜையில் 11 மகிளாக்கள் கலந்துகொண்டனர் இதில் விக்னேஷ்வர பூஜை,சாயீஸ்வரி அஷ்டோத்திரம்,லெட்சுமி அஷ்டோத்திரம்,திருவிளக்கு போற்றி, சத்ய சாயி அஷ்டோத்திரம், லலிதா ஸஹஸ்ரநாமம் பாராயணம் நடைபெற்றன மற்றும் இறுதியில் பாபாவிற்கு மங்கள ஆரத்தி எடுக்கப்பட்டு நிகழ்ச்சி நிறைவடைந்தது மற்றும் கும்பகோணம் சமிதியில் தை வெள்ளியை முன்னிட்டு 24.01.2025 அன்று விளக்கு பூஜை நடைபெற்றது 25 மகிளாக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.





# சிறப்பு பஜனை - ஸ்ரீ சத்ய சாயியின் 100 வது பிறந்த நாள் கொண்டாட்டங்கள்

தஞ்சாவூர்
14 - 31-01-2025
75 பயனாளிகள்
75 சேவாதளத்தொண்டர்கள்

நம் ஸ்வாமியின் 100வது பிறந்தநாள் விழாவினை ஒட்டி கும்பகோணம் சமிதியின் சார்பாக பல்வேறு நிகழ்ச்சிகள் மிகவும் கோலாகலமாக நடைபெற்று வருகின்றன. அதன் ஒரு பகுதியாக 100 நாள் சிறப்பு பஜனை நம் சாயி அன்பர்களின் இல்லங்களில் நடைபெற்று வருகிறது.

பாலவிகாஸ் குருமார்களின் இல்லங்கள், பாலவிகாஸ் முன்னாள் மாணவர்களின் இல்லங்கள், பாலவிகாஸ் குழந்தைகளின் இல்லங்கள் என அனைவரின் இல்லங்களுக்கும் நம் சுவாமி திகவிஜயம் செய்வதை உளமாற அனுபவிக்கும் தருணமாக அமைகிறது.

இந்த பஜனையில் பங்கேற்பதற்காக பாலவிகாஸ் குழந்தைகள் தத்தம் குருமார்களிடம் புது புது பஜனைகளை கற்றுக்கொண்டு அதனை சிறந்த முறையில் பாடுவதற்காக பயிற்சியும் செய்து நல்முறையில் பஜனைகளைப் பாடி மகிழ்கின்றனர்.



# பால விகாஸ் மாணவ மாணவர்களின் - மார்கழி மாத நகர சங்கீர்த்தனம்

தர்மபுரி & கிருஷ்ணகிரி

16/12/2024 to 14/01/2025

70 சேவாதளத்தொண்டர்கள்

நமது அன்பு பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் பேரருளாலும் ஆசீர்வாதத்துடன் தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் சென்னசந்தரம் சமிதியில் மார்கழி மாத நகர சங்கீர்த்தனம் நடைபெற்றது.

(கிராமப்புற பாலவிகாஸ் மாணவர்கள்) மார்கழி 30 நாட்களும் தினசரி ஏறத்தாழ 34 பால விகாஸ் மாணவிகள் மற்றும் 24 பால விகாஸ் மாணவர்கள் இத்துடன் 12 இளைஞர்கள் ஆக மொத்தமாக 70 நபர்கள் கலந்து கொண்டனர். இதில் பால விகாஸ் மாணவர்களின் வயது ஐந்து முதல் 12 வயது வரை அனைத்து மாணவர்களும் தவறாமல் கலந்து கொண்டனர்.

இந்த நகர் சங்கீர்த்தனம் ஆனது கிராமத்தில் உள்ள முக்கிய வீதிகளில் வலம் வந்தது. அப்பொழுது ஊர் பெரியவர்களும் மற்றும் பொதுமக்களும் இதைக் கண்டு மெய்சிலிர்த்தனர். இந்த வருட நகர சங்கீர்த்தனம் மக்களின் மத்தியில் பெரும் நல் மாற்றத்தை ஏற்படுத்தியது.

பரிசளிப்பு விழா: தை முதல் நாள் அன்று, மார்கழி மாத நகர சங்கீர்த்தனத்தில் தவறாமல் கலந்து கொண்ட பால விகாஸ் குழந்தைகளுக்கும் மற்றும் இளைஞர்களுக்கும் அவர்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த சேவை ஆனது பகவானின் நூறாவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அவர் பாதங்களில் சமர்ப்பிக்கப்படுகிறது.





# ஸ்ரீ சத்ய சாயி மாநில அளவிலான தை அமாவாசை குத்து விளக்கு பூஜை

தர்மபுரி & கிருஷ்ணகிரி

24.1.25

13 சேவாதளத்தொண்டர்கள்

24/01/2024, வெள்ளிக்கிழமை அன்று ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதி வேப்பனப்பள்ளி மகிலாஸ் விபக் சார்பாக மாநில அளவிலான தை அமாவாசை குத்து விளக்கு பூஜை இனிதே நடைபெற்றது. இதில் 13 மகிலாஸ் கலந்து கொண்டு பூஜையை சிறப்பித்தனர்.



# குத்துவிளக்கு பூஜை

தர்மபுரி & கிருஷ்ணகிரி 24.1.25

65 சேவாதளத்தொண்டர்கள்

நமது தர்மபுரி சமிதியின் சார்பாக பென்ரலி கிராமத்தில் குத்துவிளக்கு பூஜை நடைபெற்றது பூஜையில் 34 மகளிர் கலந்து கொண்டு குத்துவிளக்கு பூஜை செய்து வழிபட்டனர் மற்றும் 27 ஆடவர்கள் 22 குழந்தைகள் மற்றும் 14 மகளிர் இதில் பக்தர்களாக கலந்து கொண்டனர். 370 நபர்களுக்கு நாராயண சேவை செய்யப்பட்டது. இதில் 65 க்கும் மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் பங்குபெற்று பகவானின் அருளைப் பெற்றனர். கலந்து கொண்ட அனைவர்க்கும் பகவானின் பிரசாதம் மற்றும் நாராயண சேவை வழங்கப்பட்டது.

31.1.2025 தேதி நமது தர்மபுரி சமிதியில் குத்துவிளக்கு பூஜை நடைபெற்றது இதில் 13 மகளிர் மற்றும் 8 ஆடவர்கள் கலந்து கொண்டு பூஜையை செய்தனர்.



## சிறப்பு பூஜையாக கோ பூஜை

தர்மபுரி & கிருஷ்ணகிரி 14.1.25

பகவானின் அருளால் கெலமங்கலம் சமிதியில் மார்கழி மாதம் முடிந்து தை முதல் நாள் (14/01/25) நகர சங்கீர்த்தனம், கோ பூஜை, மகா மங்கள ஆரத்தியோடு இனிதே முடிந்தது.



# மருத்துவ மற்றும் நாராயண சேவை

தர்மபுரி & கிருஷ்ணகிரி 23.1.25 **350** பயனாளிகள்

காலை 10.30 முதல் 11.30 வரை மருத்துவமனை சேவை - 50 நோயாளிகளுக்கு ரொட்டி, சத்ய சாய்பாபா படம் மற்றும் விபூதி கொடுக்கப்பட்டது மதியம் 12 மணி முதல் 1 மணி வரை பஜனை நடைபெற்றது. இதில் 20 மகளிர் மற்றும் 20 ஆண்கள் கலந்து கொண்டு பகவானின் அருள் பெற்றனர். மதியம் 1 மணி முதல் 2 மணி வரை நாராயண சேவை நடைபெற்றது. இதில் சுமார் 300 பொதுமக்கள் பயனடைந்தனர்.



# வேதம் பயிற்சி முகாம்

காஞ்சிபுரம் வடக்கு 5.1.25 75 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் தெய்வீக ஆசீர்வாதத்துடன், 5 ஜனவரி 2025 அன்று, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில், வேதம் கற்க ஆர்வமுள்ள பக்தர்கள் / உறுப்பினர்களுக்கு வேதம் பயிற்சி பட்டறை (workshop) நடத்தப்பட்டது.

பால்விகாஸ், மூத்த மகளிர் மற்றும் ஆண்கள் அனைத்து வயதினப் பக்தர்கள் மற்றும் உறுப்பினர்கள் இந்த வேதப் பயிற்சிப் பட்டறையில் 20 சமிதிகளைச் சேர்ந்த பக்தர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

வேதத்தின் முக்கியத்துவம், யார் யார் வேதம் கற்க வேண்டும், வேதம் பற்றிய சுவாமியின் அருட்பணி அறிக்கை, நாம் ஏன் வேதம் கற்க வேண்டும், வேதம் கற்க குரு ஏன் தேவை.

இந்த தலைப்புகள் அனைத்தும் பட்டறையின் போது விவாதிக்கப்பட்டன. அடுத்த வாரம், மகளிருக்கும், ஆண்களுக்கும் தனித்தனி பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டன.





# சாய் ஸ்ருதியில் ஏகாதச ருத்ர ஹோமம்

**காஞ்சிபுரம் வடக்கு** 26.1.25 **150** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் தெய்வீக ஆசீர்வாதத்துடன், நமது மாநிலமான தமிழ்நாடு, சுவாமியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பஞ்ச பூத ஸ்தலத்தில் ஏகாதச ருத்ரம் பாராயணம் நிகழ்ச்சியை நடத்தியது. இந்த ஆன்மிக சாதனையை ஆனந்தமாக முடிக்க ஆசிர்வதித்த எங்கள் அன்பிற்குரிய பாவாகனருக்கு நன்றி செலுத்தும் விதமாக, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்களால் 26 ஜனவரி 2025 அன்று சாய் ஸ்ருதி கொடைக்கானலில் ஏகாதச ருத்ரம் ஹோமம் நடத்தப்பட்டது.

காலை 5.30 மணிக்கு ஓம்காரம், சுப்ரபாதம் மற்றும் நாகரசங்கீர்த்தனத்துடன் மாபெரும் கொண்டாட்டம் தொடங்கியது. கணபதி பூஜை, கலச ஸ்தாபனம், மஹான்யாசம், லகுன்யாசம் ஆகியவற்றைத் தொடர்ந்து அபிஷேகம், ருத்ர ஹோமம் ஆகியவற்றுடன் ஏகாதச ருத்ர பாராயணம் தொடங்கியது. பல்வேறு உபசாரங்களுக்குப் பிறகு, மகா மங்கள ஹாரத்தி எடுக்கப்பட்டது.

இதில் காஞ்சிபுரம் வடக்கு பகுதியை சேர்ந்த 150க்கும் மேற்பட்ட பக்தர்கள், கொடைக்கானல் சமிதி பக்தர்கள் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். அனைவருக்கும் சிறப்பு பிரசாதம் மற்றும் நாராயண சேவை வழங்கப்பட்டது.





# சங்கர் நகர் ஸ்ரீ தர்ம சாஸ்தா திருகோயில் - மகர ஜோதி பெருவிழா

காஞ்சிபுரம் வடக்கு | 14.1.25 | 15 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பரிபூரண அருளுடன், ஒவ்வொரு ஆண்டும் பம்மலில் அமைந்துள்ள ஸ்ரீ பவானி அம்மன் திருக்கோயிலில் இருந்து தங்க ஆபரணப் பெட்டியுடன் ஸ்ரீ சாஸ்தா உற்சவ மூர்த்தி ஊர்வலமாக சங்கர் நகர் ஸ்ரீ தர்ம சாஸ்தா திருக்கோயிலுக்கு (பம்மல் ஐயப்பன் கோயில்) வரும் போது, நமது காஞ்சி வடக்கு பம்மல் சமிதியின் சார்பாக வேதம் ஓதுவது வழக்கம்.

இந்த ஆண்டும், ஸ்ரீ சாஸ்தா திருக்கோயிலின் வேண்டுதலின்படி, பம்மல் சமிதியைச் சேர்ந்த சுமார் 15 சாய் அன்பர்கள், பம்மல் ஸ்ரீ பவானி அம்மன் கோயிலிருந்து சங்கர் நகர் ஸ்ரீ தர்ம சாஸ்தா திருக்கோயிலுக்கு வேதங்கள் முழங்க ஊர்வலத்தில் பங்கேற்றனர். இந்த புனித செயலுக்கு வாய்ப்பளித்த நமது பகவானிற்கு கோடான கோடி நன்றிகள்.


SIVA TEXTILES
044-4793
PAMMAL



# பாலவிகாஸ் கலை நிகழ்ச்சி

**காஞ்சிபுரம் வடக்கு** 12.1.25 **130** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பரிபூரண அருளுடன், ஒவ்வொரு ஆண்டும் பம்மல் சமிதி பாலவிகாஸ் விழா நடைபெறுவது வழக்கம். அதுபோல், இந்த ஆண்டும் ஸ்ரீ சங்கரா வித்யாலயா பள்ளியில் பம்மல் பாலவிகாஸ் நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

பாலவிகாஸ் மாணவர்கள் அனைவரும், குருவின் ஊக்கத்துடன் ஒன்றிணைந்து, பாலவிகாஸ் நாடகம், பஜனை, நடனம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை பகவானிற்கும் பெற்றோர்களுக்கும் அர்ப்பணித்து சிறப்பாக வழங்கினர். குறிப்பாக, பாலவிகாஸ் மாணவிகள் ஒன்று சேர்ந்து, நமது பகவானின் அவதார நிகழ்வுகளை பஜனை பாடல் மூலம் மிக அழகாக சொற்பொழிவு நிகழ்த்தினர். மேலும், சமிதியின் மகளிரும் இணைந்து ஒரு நாடக உரையாடலை நிகழ்த்தினர்.

பெற்றோர்கள் சிலர், தங்களின் பிள்ளைகள் பாலவிகாஸில் சேர்ந்து ஆன்மிக உணர்வுடன் வளர்வதை பற்றிய மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இந்நிகழ்வில் 40க்கும் மேற்பட்ட பாலவிகாஸ் குழந்தைகளும், 70க்கும் மேற்பட்ட பெற்றோர்களும் கலந்துகொண்டு மாணவ செல்வங்களின் திறமையைக்கண்டு மகிழ்ந்தனர்.
இறுதியாக, மங்கள ஆரத்தியுடன் இந்நிகழ்வு மிகச் சிறப்பாக நிறைவு பெற்றது.


SRI SA


SRI SANKARA VIDYALAYA - PA
சேவா சமிதி

# சாய் ஸ்ருதியில் பம்மல் சமிதி 29வது ஆண்டு விழா

**காஞ்சிபுரம் வடக்கு** 25.1.25 **130** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பரிபூரண ஆசியுடன், 26-01-1995 அன்று, பகவானின் 70வது பிறந்த நாளை முன்னிட்டு, பம்மல் ஸ்ரீ சத்ய சாய் பஜனை மண்டலி, ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதியாக தரம் உயர்த்தப்பட்டது.

சமிதி துவங்கி 29வது ஆண்டில் அடி எடுத்துவைப்பதை முன்னிட்டும், பகவானின் 100வது பிறந்த நாள் ஆண்டின் தொடக்கமாகவும் இருப்பதால் பம்மல் சமிதியிலிருந்து சுமார் 94 சாய் அன்பர்களும் பாலவிகாஸ் மாணவ செல்வங்களும் கொடைகானலில் உள்ள சாய் ஸ்ருதியில், 25-01-2025 அன்று காலை 11:30 மணிக்கு, காயத்திரி மாதாவிற்கு பம்மல் சமிதி சார்பாக சீர்வரிசைகளுடன் பட்டுப்புடவை சமர்ப்பிக்கப்பட்டு பஜனை பாடல்களைப்பாடி பட்டுப்புடவை அணிவிக்கப்பட்டது.

பின்னர், நமது பகவானின் அறைகளுக்கு சென்று, அவர் உபயோகித்த பொருட்களையும் பகவானின் அறிய புகைப்படங்களையும் கண்டு, நமது சாய் அன்பர்களும் பெற்றோர்களும் தெய்வீக தன்மையை உணர்ந்து மகிழ்ந்தனர்.

மாலையில், நமது சமிதிக்கு பகவான் வழங்கிய நல்செயல்களையும், சாய் ஸ்ருதியின் மகிமையையும் உணர்த்தும்

விதமாக, குறும்படம் காண்பிக்கப்பட்டது. மேலும், பாலவிகாஸ் குழந்தைகள் நாடகம், பஜனை, நடனம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. குறிப்பாக, பாலவிகாஸ் மாணவிகள் ஒன்று சேர்ந்து, நமது பகவானின் அவதார நிகழ்வுகளை பஜனை பாடல் மூலம் மிக அழகாக சொற்பொழிவு நிகழ்த்தி, நமது பகவானுக்கு சமர்பித்தனர்.

பம்மலில் இருந்து சென்றிருந்த அனைவரும், நமது பகவானின் ஆசிகளைப் பெற்று, தெய்வீக உணர்வுடன் வீடு திரும்பினர்.





# ஸ்வாகதம் ஸ்வாமி - பகவானின் அவதார நூற்றாண்டு விழா பதாகை (Banner) பொருத்துதல் நிகழ்ச்சி

காஞ்சிபுரம் வடக்கு | 1.1.25 | 17 பயனாளிகள் | 60 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் அவதார நூற்றாண்டு விழா வைபவத்தையொட்டி, மக்களின் விழிப்புணர்வுக்காக காஞ்சிபுரம் [வடக்கு] மாவட்டம், சிட்லபாக்கம் சமிதி அங்கத்தினர்களின் 17 இல்லங்களில், பகவானின் அபயஹஸ்தம் ஏந்திய திருஉருவ பதாகை (Banner) பொருத்துதல் நிகழ்ச்சி, காஞ்சிபுரம் [வடக்கு] மாவட்ட தலைவர் திரு. கண்ணன் முன்னிலையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அனைத்து இல்லங்களிலும் சாய் அங்கத்தினர் உற்சாகத்துடன், வண்ண கோலங்களால் அலங்கரித்து மங்கள ஆரத்தியுடன் பகவானை வரவேற்றனர்.






# சிறப்பு 100 பஜன் பாடல்கள் நிகழ்ச்சி

திண்டுக்கல் 16.1.25 **70** பயனாளிகள்

**10** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களது பேரருளினால் 16-01-25 வியாழக்கிழமை அன்று திண்டுக்கல் நாகல் நகர் சமிதியில் காலை 5.20 மணி முதல் மதியம் 12.30 மணி வரை 100 பஜன் பாடல்கள் பகவான் அவர்களது பொற்பாத கமலங்களில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பால விகாஸ் குழந்தைகள், பெற்றோர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் என 70 பேர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



## 100 இல்லங்களில் சிறப்பு பஜன்

திண்டுக்கல்

01/18/25/26-01-2025

110 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களது பேரருளினால் 100 இல்லங்களில் சிறப்பு சாய் பஜன் கீழ்க்கண்ட தேதிகளில் நடைபெற்றது. 8வது பஜன் - 01-01-2025 திருமதி.ராஜலட்சுமி சாய்ராம் இல்லம், 9வது பஜன் -18-01-2025 திரு.சுரேஷ் சாய்ராம் இல்லம், 10வது பஜன் - 25-01-2025 திரு.செந்தில்குமார் சாய்ராம் இல்லம், 11வது பஜன் -26-01-2025 திரு.கதிர் வடிவேலன் சாய்ராம் இல்லம்.





# திருக்கோவில் உழவாரப்பணி

திண்டுக்கல் | 6 & 20.01.2025 | 14 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களது பேரருளால் திருக்கோவில்உழவாரப்பணி கீழ்க்கண்ட தேதிகளில் நடைபெற்றது. 06.01.25 குபேர லிங்கேஸ்வரர் திருக்கோவில், 20-01-25 - வெள்ளை விநாயகர் திருக்கோவில். இந்த நிகழ்ச்சியில் 12 மகளிர் மற்றும் 2 ஆண்கள் கலந்து கொண்டு சேவையாற்றினர்.





# சிறப்பு இலவச மருத்துவ முகாம்

திண்டுக்கல் 26.1.25 **30** பயனாளிகள்

**4** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களது பேரருளினால் 26-01-25 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் 11.30 மணி வரை இலவச பொது மருத்துவ முகாம் T.வாடிப்பட்டியில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் 2 மகிளாஸ் 2 ஆண் சேவாதள தொண்டர்கள் மற்றும் 30 பயனாளிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.





# தை மாத சிறப்பு விளக்கு பூஜை

**திண்டுக்கல்** 17 & 24-01-2025 **53** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களது பேரருளினால் தை மாத சிறப்பு விளக்கு பூஜை கீழ்க்கண்ட தேதிகளில் நடைபெற்றது. 17-01-25 - பழனி சமிதி 17-01-25 - AB நகர் பஜனா மண்டலி 24-01-25 - மகாலட்சுமி நகர் சமிதி





# பாலவிகாஸ் மூன்றாம் பிரிவு முடித்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா

திண்டுக்கல் | 17.1.25 | 30 பயனாளிகள் | 30 சேவாதளத்தொண்டர்கள்

நம் ஸ்வாமியின் பேரருளால், குழந்தைகளை பண்படுத்தும் பாலவிகாஸ் வகுப்புகள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. வருடந்தோறும் பல மாணவர்கள் பாலவிகாஸ் தேர்வுகளை எழுதி வெற்றி பெற்றும் வருகின்றனர். அவ்வாறு கடந்த 2024 ம் ஆண்டிற்கான தேர்வுகளில் பாலவிகாஸ் மூன்றாம் பிரிவு தேர்வு எழுதி வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் விழா கடந்த 17.01.2025 வெள்ளி கிழமை அன்று ஒரு பாலவிகாஸ் குழந்தையின் இல்லத்தில் நடைபெற்றது.

பகவானின் அருள் பெற சிறப்பு பஜன் நடைபெற்றது. பின்னர், தேர்வுகளில் வெற்றி பெற்ற பாலவிகாஸ் மூன்றாம் பிரிவு குழந்தைகளுக்கு சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது.

இதில் பாலவிகாஸ் குழந்தைகள், பெற்றோர்கள், சமிதி பொறுப்பாளர்கள், குருமார்கள் என 30 பேர்கள் கலந்து கொண்டார்கள். அனைவருக்கும் ஸ்வாமியின் அருட்பிரசாதம் வழங்கப்பட்டது.





# மாத்ரு பூஜை மற்றும் பாலவிகாஸ் மையம் தொடங்குதல்

திண்டுக்கல் 19.1.25 **70** பயனாளிகள்

**70** சேவாதளத்தொண்டர்கள்

நம் ஸ்வாமியின் அருளால் திண்டுக்கல் EB காலனியில் கடந்த 19.01.2025 ஞாயிறு அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை புதிய பாலவிகாஸ் மையம் தொடங்கும் விழா மற்றும் மாத்ரு பூஜை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

சமுதாய நன்மைக்காக பகவான் நமக்குத் தந்த பெருவரமான பாலவிகாஸ் இன்றைய குழந்தைகளை நல்வழிப்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கின்றது. அத்தகைய பாலவிகாஸ் மற்றுமொரு புதிய மையத்தில் தொடங்கப்பட்டது. குழந்தைகளுக்கு பல்வேறு விழுமியங்களை கற்றுத் தருவதோடு அதனை அவர்கள் தம் வாழ்வில் பின்பற்றும் வகையில் மாத்ரு பூஜை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது இருந்தது.

இந்த மாத்ரு பூஜையில் 10, 12ம் வகுப்பு தேர்வு எழுதும் மாணவர்கள், பாலவிகாஸ் குழந்தைகள், பெற்றோர்கள் 70 பேர்கள் கலந்து கொண்டார்கள்.





# ஸ்ரீ சத்ய சாயி திவ்யங் திட்டம்

காஞ்சிபுரம் தெற்கு  16.1.25  13 பயனாளிகள்

30 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் கூடுவாஞ்சேரி சேவா சமிதியின் சார்பாக, ஸ்ரீ சத்ய சாயி மத்திய அறக்கட்டளையின் வழிகாட்டுதலின் படியும், ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்கள் - தமிழ்நாடு தெற்கு மாநில பொறுப்பாளர்களின் வழிகாட்டுதலின் படியும், நமது பகவானின் நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக, ஸ்ரீ சத்ய சாயி திவ்யங் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட ஊனமுற்றோருக்கு இலவச முச்சக்கர வண்டிகள் வழங்கும் சேவை 16/01/2025 அன்று சிறப்பாக நடைபெற்றது.

இதில் மிகுந்த தேவையுள்ள 3 பேருக்கு இலவச முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்கள் - தமிழ்நாடு தெற்கு மாநில துணைத்தலைவர் திரு. சாய் ஸ்ரீதர் சாய்ராம் அவர்கள், சிறப்பு விருந்தினராக பங்கேற்று இந்த சேவையை மாநில அளவில் முதல் முறையாக தொடங்கி வைத்தார்.

இந்த இலவச முச்சக்கர வண்டியை பெற்றுக்கொண்ட பயனாளிகள் மூவரும் மிகுந்த மகிழ்ச்சியோடு பகவானுக்கு மனமுருக நன்றி செலுத்தினர். அதன்பின்னர், இந்த மூவருக்கும் அமிர்தகலசங்கள் வழங்கப்பட்டன. மேலும் 10 பேருக்கு அமிர்தகலசங்கள்

வழங்கப்பட்டன.

இறுதியாக பகவானுக்கு மங்கள ஆரத்தி அர்ப்பணிக்கப்பட்டு, வருகை தந்த அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.





# மாவட்ட அளவிலான யுவயுவதிகள் மாநாடு

**காஞ்சிபுரம் தெற்கு** 26.1.25 **75** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தின் சார்பாக 26/01/2025 அன்று காஞ்சிபுரத்தில் மாவட்ட அளவிலான யுவயுவதிகள் மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வு பிரத்யேகமாக சாயி பக்தர்கள் அல்லாதோருக்கும், நமது ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்களை பற்றி தெரியாதோருக்கும் நிகழ்த்தப்பட்டது. இந்நிகழ்வில் பங்கேற்ற 58 யுவயுவதிகளுள் 28 ஆண்களும், 25 பெண்களும் அடங்குவர். காலை 8:45 மணியளவில் வேத பாராயணத்துடனும், அன்பெனும் விளக்கேற்றலுடனும் நிகழ்ச்சி தொடங்கியது. முதலாவதாக ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்கள் - காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத் தலைவர் திரு. சங்கரநாராயணன் சாய்ராம் அவர்கள் அனைவரையும் வரவேற்று, வரவேற்புரையை வழங்கினார்.

இந்நிகழ்விற்கு பல்வேறு சிறப்பு விருந்தினர்கள் வருகை தந்து யுவயுவதிகளை நன்கு வழிநடத்தினர். முதலாவதாக நமது ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்கள் - தமிழ்நாடு தெற்கு மாநில துணைத் தலைவர் திரு. விஜய கிருஷ்ணன் சாய்ராம் அவர்கள், சேவையின் மகத்துவத்தையும், சேவையால் ஏற்படும் தெய்வீக ஆற்றல் குறித்தும் நன்கு எடுத்துரைத்தார்.

அடுத்ததாக பிரபல முன்னணி வணிக நிறுவனத்தின் மனிதவள மேலாளர் திரு. கார்த்திக் சுப்ரமணியன் அவர்கள் மென்பொருள்

துறையில் வேலைவாய்ப்புகள் குறித்தும், செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி குறித்தும் எடுத்துரைத்தார். அதுமட்டுமல்லாமல் யுவயுவதிகளுக்கு சிறு சிறு விளையாட்டு போட்டிகளையும் அவர் நடத்தி, மனித உறவுகள் பற்றி செயல்முறையின் வாயிலாக அனைவருக்கும் உணர்த்தினார்.

அடுத்ததாக, பிரபல சான்றளிக்கப்பட்ட நிதித் திட்டமிடுபவர் மற்றும் ஆலோசகர் - திரு. டில்லிபாபு அவர்கள் முதலீடுகள், பணப்பரிவர்த்தனை, சேமிப்பு, கடன் மீட்பு தீர்பாயங்கள், மற்றும் பணம் தொடர்பான பல்வேறு நுட்பங்களை அனைவருக்கும் நன்கு எடுத்துரைத்தார்.

அடுத்ததாக, நமது ஸ்ரீ சத்ய சாயி பேரிடர் மேலாண்மை குழுவின் பிரதிநிதி, திரு. விஜய குமார் சாய்ராம்அவர்கள், பல்வேறு முதலுதவிகள் குறித்து செயல்முறையின் வாயிலாக எடுத்துரைத்து, அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார்.

அடுத்ததாக, பிரபல முன்னணி வணிக நிறுவனத்தின் துணைத் தலைவர் மற்றும் மனிதவள மேலாளர் - திரு. மாதவன் அவர்கள் நேர்காணல்களின் போது எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும், எவ்வாறு நேர்காணல்களில் வெற்றி பெறுவது என்பது குறித்தும் நன்கு எடுத்துரைத்தார்.

அடுத்ததாக, பிரபல முன்னணி வணிக நிறுவனத்தில் பணிபுரியும் - திரு. விஜய சுந்தர் அவர்கள் வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் பல்வேறு மென்பொருள் செயலிகள் மற்றும் இணையதள செயலிகள் குறித்தும் நன்கு விளக்கிப் பேசினார்.

பின்பு, ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்கள் - காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட யுவயுவதிகள் ஒருங்கிணைப்பாளர் - திரு ஜெய்தேவ்

பாலாஜி சாய்ராம் அவர்கள், முன்னதாக நடைபெற்ற அனைத்து சொற்பொழிவுகளின் சாராம்சத்தை சுருக்கமாக நன்கு எடுத்துரைத்தார். அத்துடன், ஓம்காரம் மற்றும் சுப்ரபாதத்தின் முக்கியத்தும் குறித்தும், அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் நன்கு விளக்கினார்.

இறுதியாக மாலை 4:00 மணியளவில் சின்ன காஞ்சிபுரம் சமிதியின் யுவயுவதிகள் ஒருங்கிணைப்பாளர் - திரு. ராஜேஷ் சாய்ராம் நன்றியுரையை பகவானுக்கு சமர்ப்பித்தார். பின்னர் பகவானுக்கு மங்கள ஆரத்தி அர்ப்பணிக்கப்பட்டு நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன .





# மார்கழி மாத சிறப்பு நகரசங்கீர்த்தனம்

**காஞ்சிபுரம் தெற்கு** **1333** சேவாதளத்தொண்டர்கள்

நமது பகவானின் அளவற்ற கருணையால், தமிழ் மாதங்களில் மிகப் புனிதத்துவம் பெற்ற மாதமான மார்கழி மாதத்தில் இவ்வையகமெங்கும் சிறப்பு பிரார்த்தனைகளும் வழிபாடுகளும் அரங்கேறுவது வழக்கம், அவ்வாறே நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட சமிதிகள் மார்கழி மாதத்தின் 30 நாட்களும், தவறாமல் பிரம்ம முகூர்த்த வேளையில் ஓம்காரம், சுப்ரபாதம் மற்றும் நகரசங்கீர்த்தனம் ஆகிய புனித நிகழ்வுகளில் தங்களையும் தங்களின் உற்றார் உறவினர்களையும், ஈடுபடுத்தி இறைநாமம் சகல ஜீவராசிகளுக்கும் சென்றடையச் செய்து வருகின்றனர்.

மார்கழி மாதத்தின் இரண்டாம் பாதியான 01/01/2025 முதல் 13/01/2025 வரை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட சமிதிகளான தாம்பரம் சேவா சமிதி, பெரிய காஞ்சிபுரம் சேவா சமிதி, பார்வதி நகர் சேவா சமிதி, பூண்டி பஜார் சேவா சமிதி, பெருங்களத்தூர் சேவா சமிதி, ஆகிய சமிதிகளின் அங்கத்தினர்கள், பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் மற்றும் பலர் தினந்தோறும் நகரசங்கீர்த்தனத்தில் பங்கேற்று பகவானின் ஆசியைப் பெற்றனர்.

அதுமட்டுமல்லாது பூண்டி பஜார் சேவா சமிதியின் சார்பாக மார்கழி மாதத்தின் அனைத்து நாட்களிலும் மாலைவேளையில் சாய் அன்பர்கள் மற்றும் பாலவிகாஸ் குழந்தைகளின் இல்லங்களில் சிறப்பு பஜனை நடைபெற்றது, இதில் சமிதி அங்கத்தினர்கள்

மற்றும் பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் கலந்துகொண்டனர்.





# நடமாடும் பொது மருத்துவ முகாம் மற்றும் கண் மருத்துவ முகாம்

காஞ்சிபுரம் தெற்கு 19.1.25 **92** பயனாளிகள்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தின் சார்பில் நடைபெறும் மாதாந்திர நடமாடும் மருத்துவ முகாம் மற்றும் கண் மருத்துவ முகாம் ஆகியன ஜனவரி மாதத்தில் 19 ஆம் நாள் தாம்பரம் சமிதியின் தத்து கிராமமான ஆரம்பாக்கம் கிராமத்தில் ஸாயி கார்டன்ஸ் என்னுமிடத்தில் மிகச் சிறப்பாக நடை பெற்றது.

இம் முகாமிற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் தாம்பரம் சமிதி கன்வீனர் மற்றும் உறுப்பினர்கள் சிறந்த முறையில் ஏற்பாடு செய்திருந்தனர். காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சார்ந்த மற்ற சமிதிகளின் சேவாதளத் தொண்டர்கள் இம்முகாம் வெற்றிகரமாக நடைபெற பல்லாற்றானும் சேவை புரிந்து பகவானின் அருள் ஆசிகளைப் பெற்று மகிழ்ந்தனர்.

இம்முகாமில் கீழ்காணும் மருத்துவ வல்லுனர்கள் வருகை தந்து பயனாளிகளை பரிசோதித்து மருந்து மாத்திரைகள் பரிந்துரை செய்து சேவை புரிந்தனர்.
1. மரு. திரு. சேஷகிரி ஸாயிராம் அவர்கள். நெஞ்சக நோய் வல்லுனர்.
2. மரு. திரு. யோகேஸ்வரன் ஸாயிராம் அவர்கள் பல் மருத்துவர்.
3. மரு. திரு. நாகராஜன் ஸாயிராம் அவர்கள் பொது மருத்துவர்

மற்றும் முகாம் இயக்குனர்.
4. மரு. அஷ்வின் ஸாயிராம் அவர்கள் பொது மருத்துவர்.
5. மரு. அனுராதா ஸாயிராம் அவர்கள் குழந்தை நல மருத்துவர்.

இவர்களுக்கு உதவியாக, பார்வை மருத்துவ உதவியாளர்கள் திரு குமார் ஸாயிராம் மற்றம் வசந்தி ஸாயிராம் ஆகியோரும் ஆய்வக உதவியாளர்கள் திரு ஸ்வாமிநாதன் ஸாயிராம் திரு ஸ்ரீதர் ஸாயிராம் மற்றும் மாணிக்கம் ஸாயிராம் ஆகியோரும் இ.சி. ஜி தொழில் நுட்ப வல்லுனர் திரு தேவராஜ் ஸாயிராம் திருமதி லலிதா ஜெயராமன் ஸாயிராம் ஆகியோரும் எக்ஸ் கதிர் தொழில்நுட்ப வல்லுனர் திரு அசோக்குமார் ஸாயிராம் மற்றும் யோகா பயிற்றுனர் திருமதி பிரவீணா ஸாயிராம் ஆகியோரும் சேவை புரிந்தனர்.

இம் முகாமினால் பயனடைந்த பயனாளிகளின் எண்ணிக்கை 92 ஆகும் ( ஆண்கள் : 44 ,பெண்கள் : 48) கண் பரிசோதனை செய்து கொண்ட 22 பயனாளிகளில் 6 பேர் கண் புரை அறுவை சிகிச்சைக்கு தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் முகாம் முடிவுற்றபின் பம்மல் சங்கரா கண் மருத்துவ மனை ஊர்தி மூலம் அம் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தெரிவு செய்யப்பட்ட 6 பயனாளிகளில் இருவர் மட்டுமே அறுவைசிகிச்சைக்கு தகுதி வாய்ந்தவர்களாக கருதப்பட்டு அவர்கள் இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

வருகை தந்த பயனாளிகளில் இ.சி.ஜி பரிசோதனை 5 நபர்களுக்கும் நீரிழிவு நோய்க்கான இரத்த பரிசோதனை 108 நபர்களுக்கும் எடுக்கப்பட்டது .இம் முகாமில் 6 பயனாளிகளுக்கு யோகா பயிற்சியினை யோகா பயிற்றுனர் திருமதி பிரவீணா ஸாயிராம் அவர்கள் வழங்கினார்கள். மருத்துவர்கள் பரிந்துரைத்த பயனாளிகள் அனைவருக்கும் ஒரு மாதத்திற்கு தேவையான

மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன. முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஸ்வாமி பிரசாதமாக காலை சிற்றுண்டி தேநீர் மற்றும் நண்பகல் உணவு வழங்கப்பட்டன.

இறுதியில் பகவானுக்கு மங்கள ஆரத்தி காட்டப்பட்டு முகாம் இனிதே நிறைவு எய்தியது.





# இலவச பொது மருத்துவ முகாம்

காஞ்சிபுரம் தெற்கு

136 பயனாளிகள்

46 சேவாதளத்தொண்டர்கள்

நமது பிரியமான பகவானின் பேரன்பு கலந்த நல்லாசிகளுடன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள சமிதிகள் தங்களின் சமிதிகளைச் சுற்றியுள்ளோருக்கு இலவச பொது மருத்துவ முகாம்களை மாதந்தோறும் நடத்தி வருகின்றன. கடந்த ஜனவரி மாதத்தில் பூண்டி பஜார் சேவா சமிதி, பார்வதி நகர் சேவா சமிதி, மண்ணிவாக்கம் சேவா சமிதி, ஆகிய சமிதிகள் பொது மருத்துவ முகாம்களை நடத்தி பகவானுக்குத் தொண்டாற்றின.

பூண்டிபஜார் சமிதியின் சார்பாக, 12/01/2025 அன்று இலவச பொது மருத்துவ முகாம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தாம்பரம் மருத்துவமனையில் பணிபரியும் மருத்துவர் 1, செவிலியர் 3, பெயர்பதிவுநபர் 1 ஆகியோர் பங்கு கொண்டனர். இந்த இலவச முகாமில் இரத்த அழுத்தம் கண்டறிதல், சர்க்கரை அளவு கண்டறிதல், இதயத் துடிப்பு கண்டறிதல், கண் பரிசோதனை ஆகியவை மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் மருத்துவ ஆலோசனை மற்றும் இலவச மருந்துகளும் வழங்கப்பட்டன. இந்தமுகாமில் 51 நபர்கள் பரிசோதனை செய்து கொண்டு பயன்பெற்றனர். இந்த மகத்துவமான சாயி சேவையில் சமிதி அங்கத்தினர்கள் 10 பேர் கலந்து கொண்டு பகவானின்

ஆசீர்வாதம் பெற்றனர்.

பார்வதி நகர் சேவா சமிதியின் சார்பாக கரசங்கால் கிராமத்தில் பொது மருத்துவ முகாம் 12/01/2025 அன்று நடைபெற்றது. இதில் சாய் அன்பர்கள் மற்றும் மருத்துவர்கள் அன்புடனும் ஆர்வத்துடனும் பங்கேற்று மக்களுக்குத் தொண்டாற்றினர். இம்முகாமில் இரத்த அழுத்தம் கண்டறிதல் மற்றும் நீரிழிவு நோயாளிகளுக்கு சர்க்கரை அளவுகளை கண்டறிதல், அவர்களின் உடல் எடை கண்டறிதல் ஆகிய பரிசோதனைகள் நடத்தப்பட்டு அதற்கு உரிய மருந்து மாத்திரைகள் நோயாளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

கலந்து கொண்ட அனைத்து நபர்களுக்கும் நாராயண சேவை வழங்கப்பட்டது. 40 கிராம பொது மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று பயன்பெற்றனர். இந்த மகத்துவமான சாயி சேவையில் சமிதி அங்கத்தினர்கள் 8 பேர் கலந்து கொண்டு பகவானின் ஆசீர்வாதம் பெற்றனர்.

மண்ணிவாக்கம் சேவா சமிதியின் சார்பாக 05/01/2025, 12/01/2025, 19/01/2025 மற்றும் 26/01/2025 ஆகிய தினங்களில் மண்ணிவாக்கம் சமிதியில் இலவச மருத்துவ முகாம்கள் நடைபெற்றன. இதில் தலை சிறந்த மருத்துவரான டாக்டர். சேஷகிரி நெஞ்சக நோய் நிபுணர் - ஓய்வுபெற்ற அரசு மருத்துவர் மற்றும் டாக்டர் செல்வி மனிஷா ஆகியோர் பங்கேற்று முகாமிற்கு வருகை தந்த 45 நோயாளிகளுக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளித்தனர். இதில் சுமார் 9 பேருக்கு இரத்த பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது.

நோயாளிகளுக்கு மருந்துகளும் இலவசமாக வழங்கப்பட்டன. இந்த சேவையில் சராசரியாக மண்ணிவாக்கம் சேவா சமிதியின் 5 சாயி அன்பர்கள் மற்றும் 2 பாலவிகாஸ் குழந்தைகள் மிகுந்த

ஆர்வத்துடனும், சேவை மனப்பான்மையுடனும் ஒவ்வொரு முகாமிலும் பங்கேற்று பகவானுக்குத் தொண்டாற்றினர்.





# அத்தியாவசிய பொருட்கள் விநியோகம்

**காஞ்சிபுரம் தெற்கு**

**85** பயனாளிகள்

**6** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் மறைமலை நகர் சேவா சமிதியின் சார்பாக, பகவானின் 100 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, 09/01/2025 அன்று மறைமலை நகரில் உள்ள சுமார் 50 சுகாதார பணியாளர்களுக்கு வஸ்திர தானமும், இனிப்புடன் கூடிய உணவு பொட்டலங்களும் வழங்கப்பட்டன. அதுமட்டுமல்லாது, பகவானின் 100 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, 13/01/2025 அன்று திருப்போரூர் சங்கரா முதியோர் இல்லத்தில் வசிக்கும் சுமார் 35 முதியோர்களுக்கு போர்வைகள் மற்றும் கம்பளிகள் வழங்கப்பட்டன.





# தைவெள்ளி சிறப்பு திருவிளக்கு பூஜை

**காஞ்சிபுரம் தெற்கு** **335** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் அளவற்ற கருணையால் தை மாதம் மற்றும் ஆடி மாதம் ஆகிய இரு மாதங்களிலும் வரும் அனைத்து வெள்ளிக்கிழமைகளும் மிகவும் விஷேஷமானவை. அவை அம்மனுக்கு உகந்தவையாக கருதப்படுகின்றன. இந்நாள்களில் பெண்கள் ஆலயங்களுக்குச் சென்று அங்கு ஏற்பாடு செய்யப்படும் திருவிளக்கு பூஜையில் கலந்து கொண்டு அம்மனின் அருட் பிரசாதத்தைப் பெற்று மகிழ்வுடன் இல்லம் திரும்புவார்கள்.

அத்தகைய புனிதமான தை மாதத்தின் முதல் பாதியான ஜனவரி மாதத்தில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த சமிதிகள் தை வெள்ளி திருவிளக்கு பூஜையில் திரளாக பங்கேற்றன. அவ்வகையில் இந்த சிறப்புமிக்க பூஜையில் மண்ணிவாக்கம் சேவா சமிதி, கூடுவாஞ்சேரி சேவா சமிதி, பெரிய காஞ்சிபுரம் சேவா சமிதி, மறைமலை நகர் சேவா சமிதி, பெருங்களத்தூர் சேவா சமிதி, செங்கல்பட்டு சேவா சமிதி, பார்வதி நகர் சேவா சமிதி, பூண்டி பஜார் சேவா சமிதி, இந்திரா நகர் சேவா சமிதி ஆகிய சமிதிகள் மற்றும் அதன் பஜனை மண்டலிகள் பங்கேற்றன.

இந்நிகழ்வில் சமிதி அங்கத்தினர்கள், பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர், ஸ்ரீ சத்ய சாயி திறன் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் பயனடைந்த பெண்கள் என பலர் இந்த புனிதமான நிகழ்வில் பங்கேற்று பகவானின் அருளைப் பெற்றனர்.

திருவிளக்கு பூஜை நடைபெற்ற பின், சிறப்பு பஜனை நடைபெற்றது. இறுதியாக பகவானுக்கு மங்கள ஆரத்தி அர்ப்பணிக்கப்பட்டு வருகை தந்த அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.





## இலவச கண் சிகிச்சை முகாம்

காஞ்சிபுரம் தெற்கு | 26.1.25 | **45** பயனாளிகள் | **5** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் ஆசியுடன் செங்கல்பட்டு சேவா சமிதியின் சார்பாக, பம்மல் சங்கரா கண் மருத்துவமனை, மூலமாக இலவச கண் சிகிச்சை முகாம் 26/01/2025 அன்று ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதி செங்கல்பட்டில் நடைபெற்றது. இதில் மொத்தம் 13 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

இதில் கண் புரை அறுவை சிகிச்சைக்குத் தேர்ந்து எடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 8 ஆகும். இந்நிகழ்வில் பங்கேற்ற சேவாதளத் தொண்டர்களின் எண்ணிக்கை 5 ஆகும். முகாமில் பங்கேற்ற அனைவருக்கும் நாராயண சேவை வழங்கப்பட்டது.

நாராயண சேவையில் மொத்தம் 5 குடும்பங்கள் பங்கேற்று பகவானுக்குத் தொண்டாற்றின. நாராயண சேவை 45 பேருக்கு செய்யப்பட்டது.

# சாயி புரத சத்து மாவு வழங்கும் சேவை

காஞ்சிபுரம் தெற்கு

280 பயனாளிகள்

26 சேவாதளத்தொண்டர்கள்

நமது பிரியமான பகவானின் பேரன்பு கலந்த நல்லாசியுடனும், "ஸ்வாமியின் அன்பு 1000 அன்னையர்களின் அன்பிற்குச் சமம்", என்ற கூற்றிற்கேற்பவும் ஒவ்வொரு மாதமும் தேகபலத்தையும் மனபலத்தையும் தந்திடும் சாயி புரதச் சத்து மாவானது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள சமிதிகளால், தேவைப்படுவோருக்கு தானமாக வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஜனவரி மாதத்தில் ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதி, பெருங்களத்தூர் சேவா சமிதி, தாம்பரம் சேவா சமிதி, ஆகிய சமிதிகள், இந்தப் புனிதமான சேவையில் பங்கேற்று பகவானுக்கு மகிழ்ச்சி அளித்தன.

ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதியின் சார்பாக ஸ்ரீபெரும்புதூரில் அமைந்துள்ள தயானந்த சரஸ்வதி கிருபா இல்லம் என்ற அமைப்பிற்கு 21/01/2025 அன்று நமது ஸ்வாமியின் கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் தயாரித்தளித்த 30 கிலோ சாயி புரதச் சத்து மாவை, ஸ்ரீபெரும்புதூர் சமிதி அங்கத்தினர்கள் அந்த விடுதியின் காப்பாளரிடம் வழங்கினர். இதில் ஸ்ரீபெரும்புதூர் சமிதி அங்கத்தினர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்று நமது பகவானின் திருப்பணியில் தங்களை அர்ப்பணித்துக்கொண்டனர்.

தாம்பரம் சேவா சமிதியின் சார்பாக தாம்பரம் சமிதி மகளிர் குழு

20/01/2025 அன்று குரோம்பேட்டையில் உள்ள பொது மருத்துவமனைக்குச் சென்று அங்கு உள்ள கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் என 125 பேருக்கு சாய் புரதச் சத்து மாவை விநியோகம் செய்தனர். சாய் புரதச் சத்து மாவு அனந்தபூர் கல்லூரியின் முன்னாள் மாணவிகளின் பொருளாதார உதவியுடன் தயார் செய்யப்பட்டது.

பெருங்களத்தூர் சேவா சமிதியின் சார்பாக, சமிதியின் அங்கத்தினர்கள் தாமாகவே சாய் புரதச் சத்து மாவிற்கான மூலப்பொருட்களை தரமான முறையில் கொள்முதல் செய்து, அதனை சுத்தமான முறையில் வறுத்தரைத்து, நன்கு ஆறவைத்து, கலந்து, அதனைப் பொட்டலங்களாகக்கட்டி, 05/01/2025 அன்று செங்கல்பட்டு அரசு மருத்துவமனையிலும், தாம்பரம் சானடோரியம் காசநோய் மருத்துவமனையிலும், சுமார் 123 பேருக்கு சாய் புரதச் சத்து மாவு பொட்டலங்களை இலவசமாக வழங்கினர். இதில் பெருங்களத்தூர் சேவா சமிதி அங்கத்தினர்கள் தங்களை மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபடுத்திக்கொண்டனர்.



# உழவாரப்பணி

**காஞ்சிபுரம் தெற்கு** 46 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட சமிதிகள் தங்கள் சமிதியைச் சுற்றியுள்ள ஆலயங்களை சுத்தம் செய்து பொது மக்களுக்கும், பகவானுக்கும் சேவை செய்து வருகின்றனர். அந்த வகையில் கடந்த ஜனவரி மாதத்தில் ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதி, பெருங்களத்தூர் சேவா சமிதி, கூடுவாஞ்சேரி சேவா சமிதி, மறைமலை நகர் சேவா சமிதி, சின்ன காஞ்சிபுரம் சேவா சமிதி, பெரிய காஞ்சிபுரம் சேவா சமிதி, மற்றும் காஞ்சிபுரம் கலெக்டரேட் சேவா சமிதி ஆகிய சமிதிகள் இந்த சேவையில் பங்கேற்றன.

ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதியின் சார்பாக 08/01/2025 அன்று ஸ்ரீபெரும்புதூருக்கு அருகிலுள்ள மாம்பாக்கத்தில் அமைந்துள்ள அருள்மிகு பொன்னியம்மன் திருக்கோவிலில், உழவாரப்பணி நடைபெற்றது. இதில் மகிளா சேவாதளத் தொண்டர்கள் 5 பேர் கலந்துகொண்டு பகவானுக்குத் தொண்டாற்றினர்.

பெருங்களத்தூர் சேவா சமிதியின் சார்பாக 12/01/2025 அன்று மதனபுரத்தில் உள்ள அருள்மிகு சுமுக விநாயகர் கோயிலில் சமிதியின் சேவதாளத் தொண்டர்கள், இளைஞர்கள் மற்றும் பாலவிகாஸ் மாணவர்கள் உழவாரப்பணியில் ஈடுபட்டனர். சுமார் 10 பேர் இந்த சேவையில் பங்கேற்று பகவானின் அருளைப் பெற்றனர்.

கூடுவாஞ்சேரி சேவா சமிதியின் சார்பாக 25/01/2025 அன்று சமிதியில் உழவாரப்பணி நடைபெற்றது. இந்நிகழ்வில் பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் பெருமளவில் பங்கேற்றனர். சுமார் 8 பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் இந்நிகழ்வில் பங்கேற்று பகவானின் அருளைப் பெற்றனர்.

சின்ன காஞ்சிபுரம் சேவா சமிதி, பெரிய காஞ்சிபுரம் சேவா சமிதி, மற்றும் காஞ்சிபுரம் கலெக்டரேட் சேவா சமிதியின் சார்பாக 19/01/2025 அன்று காஞ்சிபுரத்தில் உள்ள அருள்மிகு பணாமுடிஸ்வரர் கோயிலில் உழவாரப்பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் சுமார் 13 பேர் பங்கேற்று பகவானின் அருளைப் பெற்றனர்.

மறைமலை நகர் சேவா சமிதியின் சார்பாக, 12/01/2025 அன்று மறைமலை நகரில் உள்ள அருள்மிகு நாகவல்லி அம்மன் கோவிலில் உழவாரப்பணி நடைபெற்றது. இதில் சுமார் 10 பேர் கலந்துகொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.





# இல்லத்திலும் உள்ளத்திலும் சாயி நாமம்

**காஞ்சிபுரம் தெற்கு** **192** சேவாதளத்தொண்டர்கள்

நமது இதயத்தில் என்றும் வாசம்செய்யும் நமது பகவானின் அருளுடன். காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட சமிதிகள் ஒவ்வொரு மாதமும் "இல்லத்திலும் உள்ளத்திலும் சாயி நாமம்" என்ற திட்டத்தின் கீழ், தங்கள் சமிதியைச் சார்ந்த அங்கத்தினர்களின் இல்லங்களிலோ, முதியோர் இல்லங்களிலோ, அல்லது மற்றவர்களின் இல்லங்களிலோ வேத பாராயணம், பஜனை ஆகியவற்றை மேற்கொண்டு, சாயி நாமத்தைப் பலரின் உள்ளங்களில் அவனருளாலே நிலைநாட்டி, அவர்களை ஆத்ம திருப்தி அடையச்செய்கின்றன.

அந்த வகையில் கடந்த ஜனவரி மாதத்தில் தாம்பரம் சேவா சமிதி, கூடுவாஞ்சேரி சேவா சமிதி ஆகிய சமிதிகள் இந்த சேவையில் கலந்துகொண்டு பகவானுக்குத் தொண்டாற்றின.

தாம்பரம் சேவா சமிதியின் சார்பாக, தாம்பரம் சமிதியின் உறுப்பினர்கள், தங்கள் சமிதி உறுப்பினர்களின் இல்லங்களுக்கு வாரந்தோறும் சனிக்கிழமைகளில் சென்று அவ்வில்லத்தாருடன் இணைந்து ருத்ர பாராயணம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். பாராயணம் முடிந்த பிறகு, பகவான் பாபாவிற்கு மங்கள ஆரத்தி காட்டப்பட்டு நிகழ்ச்சி நிறைவு பெறுகிறது.

அந்த வகையில் கடந்த மாதம் 11/01/2025, 18/01/2025 மற்றும் 25/01/2025 ஆகிய நாட்களில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தாம்பரம் சமிதியின் அங்கத்தினர்கள் மற்றும் பாலவிகாஸ் குழந்தைகள் கலந்து கொண்டனர்.

இதுவரை பகவானின் பேரருளால் 80 இடங்களில் (பக்தர்களின் இல்லங்கள் மற்றும் பொது இடங்கள்) இந்நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

கூடுவாஞ்சேரி சேவா சமிதியின் சார்பாக 26/01/2025 அன்று சமிதியின் பாலவிகாஸ் முன்னாள் மாணவி மற்றும் தற்போதைய பாலவிகாஸ் குரு செல்வி. தேஜாஸ்ரீ மற்றும் செல்வி. ஹேமாஸ்ரீ அவர்களின் இல்லத்தில் சிறப்பு பஜனை நடைபெற்றது. இந்நிகழ்வில் 10 பாலவிகாஸ் குழந்தைகள் உட்பட 16 பேர் கலந்துகொண்டனர்.





# கோ பூஜை

காஞ்சிபுரம் தெற்கு 15.1.25 60 பயனாளிகள்

35 சேவாதளத்தொண்டர்கள்

நமது பகவானின் அருளால், மறைமலை நகர் சேவா சமிதியின் சார்பாக 15/01/2025 அன்று, ஆத்தூர் வேத பாடசாலையில் கோ பூஜை நடைபெற்றது. பின்பு அங்குள்ள 60 பசுக்களுக்கு அகத்திக்கீரை வழங்கப்பட்டது. மொத்தம் பங்குகொண்ட சேவதளர்களின் எண்ணிக்கை 5. அதேபோல், பூண்டி பஜார் சேவா சமிதியின் சார்பாக 15/01/2025 அன்று கோ பூஜை, சமிதியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சமிதியின் அங்கத்தினர்கள் திரளாக பங்கேற்று பகவானின் அருளைப் பெற்றனர்.





# வாஹினி கற்றல் நிகழ்ச்சிகள்

காஞ்சிபுரம் தெற்கு

1 - 31-01-2025

30 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் பாபா அருளிய 9 நன்னடத்தை விதிகளுள் ஒன்று சாயி இலக்கியங்களைப் படிப்பது. அதனைக் கடைபிடிக்கும் வண்ணமாக, தாம்பரம் சேவா சமிதியின் சார்பாகக் கடந்த ஜனவரி மாதத்தின் அனைத்து நாட்களிலும் இணையதள சந்திப்பின் வாயிலாக வாஹினி கற்றல் தொடர் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதில் ராமகதா ரச வாஹினி, பாகவத வாஹினி, தர்ம வாஹினி, பிரேம வாஹினி, தியான வாஹினி, பிரசாந்தி வாஹினி, சத்ய சாயி வாஹினி, சந்தேஹ நிவாரணி, வித்யா வாஹினி ஆகியவற்றின் கற்றல் நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நடந்து வருகின்றன.

இந்நிகழ்வில் சமிதி அங்கத்தினர்கள், பாலவிகாஸ் குழந்தைகள், பஜனை மண்டலி அங்கத்தினர்கள், பாலவிகாஸ் பெற்றோர் உட்பட சராசரியாக 30 பேர் தினமும் கலந்துகொள்கின்றனர்.

# ஸ்ரீ சத்ய சாயி அமிர்த கலசம் விநியோகம்

காஞ்சிபுரம் தெற்கு 4.1.25 47 பயனாளிகள்
5 சேவாதளத்தொண்டர்கள்

நமது பிரியமான பகவானின் பேரன்பு கலந்த நல்லாசிகளுடன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள சமிதிகள் ஒவ்வொரு மாதமும் தங்களின் சமிதியைச் சுற்றியுள்ளோருக்கும், தங்களின் சமிதியைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் சென்று அங்குள்ளோருக்கு, நமது பகவானால் தொடங்கி வைக்கப்பட்ட "அமிர்த கலசம்" என்னும் பகவானின் பிரசாதத்தை இலவசமாக வழங்கி வருகின்றன.

இந்த அமிர்த கலசத்தில் ஒரு மாதத்திற்கு தேவையான மளிகை பொருட்களும், குளியல் பொருட்களும் அடங்கியுள்ளன. கடந்த ஜனவரி மாதத்தில், ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதி, மறைமலை நகர் சேவா சமிதி ஆகிய சமிதிகள் இந்த சேவையில் ஈடுபட்டன.

ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதியின் சார்பாக, ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதியின் தத்து கிராமமான நந்திமேடு கிராமத்தில் மிகுந்த தேவையுள்ள ஒரு குடும்பத்திற்கு 04/01/2025 அன்று ஒரு அமிர்த கலசம் வழங்கப்பட்டது.

மறைமலை நகர் சேவா சமிதியின் சார்பாக, 04/01/2025 அன்று மறைமலை நகர் சமிதியைச் சுற்றியுள்ள 8 குடும்பங்களுக்கு

அமிர்த கலசங்கள் வழங்கப்பட்டன. அதுமட்டுமல்லாது ரயில் நகர் பகுதியில் உள்ள 36 இருளர்களுக்கு 36 போர்வையும், 2 பேருக்கு அவர்கள் வீட்டின் கூரை ஒழுகாதிருக்க தார்பாலினும் வழங்கப்பட்டன.





## சிறப்பு நாராயண சேவை

காஞ்சிபுரம் தெற்கு | 25.1.25 | 42 பயனாளிகள் | 13 சேவாதளத்தொண்டர்கள்

நமது பிரியமான பகவானின் பேரன்பு கலந்த நல்லாசிகளுடன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள சமிதிகள் ஒவ்வொரு மாதமும் தங்களின் சமிதியைச் சுற்றியுள்ளோருக்கு நாராயண சேவை செய்துவருகின்றனர். "மானவ சேவையே மாதவ சேவை" என்ற கூற்றிற்கிணங்க சமுதாயத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கு நமது சாயி அன்பர்கள் உணவளித்து பகவானுக்கு தொண்டாற்றிவருகின்றனர். அந்த வகையில் கடந்த ஜனவரி மாதத்தில், ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதி, இந்த சேவையில் ஈடுபட்டது.

ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதியின் சார்பாக, 25/01/2025 அன்று ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ஸ்ரீமத் ராமானுஜர் திருக்கோவிலின் முன்பு ஒரு சிறப்பு நாராயண சேவை நடத்தப்பெற்றது. இந்நிகழ்வில் 11 மகளிர் தங்கள் இல்லங்களில் நாராயண சேவைக்கு தேவையான உணவைச் சமைத்து, பகவானுக்கு அர்ப்பணிக்கப்பட்டு, பின் நாராயண சேவை செய்யப்பட்டது. இச்சேவையின் மூலம் சுமார் 42 பேர் பயனடைந்தனர்.

இச்சேவையில் பங்கேற்ற மகளீருள் பெரும்பாலானோர், சமிதியின் பாலவிகாஸ் குழந்தைகளின் பெற்றோர் ஆவர். இந்நிகழ்வில்

பாலவிகாஸ் முதலாம் பிரிவு மாணவி - செல்வி.தக்விதா நேரடியாக நாராயண சேவை செய்தது குறிப்பிடத்தக்கது.



# புத்தாண்டு தின சிறப்பு சேவை

காஞ்சிபுரம் தெற்கு | 1.1.25 | 58 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் 01/01/2025 - ஆங்கில புத்தாண்டு அன்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட சமிதிகள் இணைந்து சேவை செய்ய ஓர் அறிய வாய்ப்பு பகவானால் கிட்டியது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள வல்லக்கோட்டை முருகன் கோவிலில் அமைந்துள்ள K.K.V டிரஸ்ட் அன்னதானகூடத்தில் அந்த டிரஸ்டின் சார்பாக, கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படும் உணவை சமைப்பதற்கும், பந்திகளில் உணவை பரிமாறுவதற்கும், கூட்ட நெரிசலை கட்டுப்படுத்துவதற்கும் கோவில் நிர்வாகம் நமது ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனத்திற்கு வழங்கியது.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தின் அனைத்து சமிதிகளிலும் இருந்து சுமார் 58 பேர் இந்த சேவைப்பணியில் ஈடுபட்டு பகவானின் அருளைப் பெற்றனர்.


குடி தண்ணீர்
DRINKING WATER



# புத்தாண்டு தின சிறப்பு பஜனை

காஞ்சிபுரம் தெற்கு | 1.1.25 | 40 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் 01/01/2025 அன்று பெருங்களத்தூர் சேவா சமிதியின் சார்பாக புத்தாண்டு தின சிறப்பு பஜனை நடைபெற்றது. காலை 5:00 மணியளவில் ஆங்கில புத்தாண்டை வரவேற்கும் விதமாக ஓம்காரம், சுப்ரபாதம் மற்றும் நகரசங்கீர்த்தனம் நடைபெற்றன. அதன் பின்னர் பிரசாந்தி கொடி ஏற்றப்பட்டது. மாலை 5:45 மணியளவில் வேத பாராயணத்துடன் சிறப்பு பஜனை நடைபெற்றது. இந்நிகழ்வில் சமிதி அங்கத்தினர்கள் கலந்துகொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.

இதேபோல் பார்வதி நகர் சேவா சமிதியின் சார்பாக காலை 5:00 மணியளவில் ஆங்கில புத்தாண்டை வரவேற்கும் விதமாக ஓம்காரம், சுப்ரபாதம் மற்றும் நகரசங்கீர்த்தனம் நடைபெற்றன.



# வைகுண்ட ஏகாதசி சிறப்பு நிகழ்ச்சிகள்

காஞ்சிபுரம் தெற்கு | 10.1.25 | 158 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் 10/01/2025 அன்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட சமிதிகள் வைகுண்ட ஏகாதசி பெருவிழாவை மிகச் சிறப்பாக கொண்டாடின.

பூண்டி பஜார் சேவா சமிதியின் சார்பாக காலை பரமபதவாசல் திறக்கப்பட்டு நமது அன்பு பகவான் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் அமர்த்தப்பட்டு அவ்வாசல் வழியாக ஆடி அசைந்து வந்தது கண் கொள்ளாகாட்சியாக இருந்தது. மேலும் வேதம் முழங்க பல்லக்கு சேவை மற்றும் நகரசங்கீர்தனம் நடைபெற்றது.

மாலையில் பாலவிகாஸ் குழந்தைகள் சிறப்பாக பஜனை செய்தனர். மேலும் வேதம், விஷ்ணுசகஸ்ரநாமம் பாராயணம் செய்யப்பட்டு, சிறப்பு பஜனை நடைப்பெற்றது. இதில் இந்திராநகர் சமிதி சாய் அன்பர்கள் மற்றும் பூண்டிபஜார் சமிதி சாய் அன்பர்கள் கலந்து கொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.

பார்வதி நகர் சேவா சமிதியின் சார்பாக அதிகாலையில் ஓம்காரம், சுப்ரபாதம் மற்றும் நகரசங்கீர்த்தனம் நடைபெற்றன.

பெரிய காஞ்சிபுரம் சேவா சமிதியின் சார்பாக வைகுண்ட ஏகாதசி தினத்தை முன்னிட்டு சிறப்பு பஜனை 2 இடங்களில் நடைபெற்றது. சமிதியின் ஒரு பாலவிகாஸ் மையத்திலும், பாண்டுரங்கன்

கோவிலும் சிறப்பு பஜனை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் சமிதி அங்கத்தினர்கள், பாலவிகாஸ் குழந்தைகள் உட்பட 37 பேர் கலந்துகொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.





# ஸ்ரீ சாயி மாரியம்மன் கோயில் ஆண்டு விழா - கிராம சேவை

காஞ்சிபுரம் தெற்கு 26.1.25 **75** பயனாளிகள் **15** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் 26/01/2025 அன்று பார்வதி நகர் சேவா சமிதியின் தத்து கிராமமான செரப்பணஞ்சேரி, ஸ்ரீ சாயி மாரியம்மன் கோயில் ஆண்டு விழாவை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் கிராமத்தில் நடைபெற்றன.

தத்தெடுக்கப்பட்ட செரப்பணஞ்சேரி கிராமத்தில் வேதபாராயணம் மற்றும் சிறப்பு பஜனையுடன் நிகழ்ச்சி தொடங்கியது. அங்கு குடியிருக்கும் குடும்பத்தினர்களுக்கு சாயி புரத சத்து மாவு பொட்டலங்கள், வஸ்தரதானம், நாராயண சேவை ஆகியன வழங்கப்பட்டன.

கிராம மக்கள் மகிழ்ச்சியோடு பெற்று பகவானுக்கு நன்றி செலுத்தினர். நிகழ்ச்சியின் முடிவில் பகவானுக்கு ஆரத்தி அர்ப்பணிக்கப்பட்டு அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது

# தையல் மற்றும் ஆரி வகுப்பு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு

காஞ்சிபுரம் தெற்கு 21.1.25 **30** பயனாளிகள்

**5** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் 21/01/2025 அன்று பெருங்களத்தூர் சேவா சமிதியின் சார்பாக சமிதியின் தத்து கிராமமான இந்திரா நகரில், ஸ்ரீ சத்ய சாயி திறன் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் தையல் மற்றும் ஆரி வேலை வகுப்புகளை வெற்றிகரமாக முடித்த 30 பெண்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

Love All, Serve All
Help Ever, Hurt Never

# சேவா வாணி

ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)

தமிழ்நாடு - தெற்கு

ஜனவரி 2025

## மகர சங்கராந்தி கொண்டாட்டங்கள்

**காஞ்சிபுரம் தெற்கு** **35 சேவாதளத்தொண்டர்கள்**

பகவானின் பெருங்கருணையினால் பெருங்களத்தூர் சேவா சமிதியின் சார்பாக சமிதியின் மகர சங்கராந்தி விழா வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டது. 14/01/2025 அன்று அதிகாலையில் ஓம்காரம், சுப்ரபாதம் மற்றும் நகரசங்கீர்த்தனம் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து பிரசாந்தி கொடி ஏற்றப்பட்டது.

மாலையில் சிறப்பு பஜனையும், இறுதியாக மங்கள ஆர்த்தியும் நடைபெற்றன. 19/01/2025 அன்று பாலவிகாஸ் மாணவிகளுக்கு கோலப்போட்டி நடைபெற்றது. இதில் 12 பாலவிகாஸ் மாணவிகள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர்.





# ஷீரடி ஸாய் பாபா விக்ரஹம் பிரதிஷ்டைதினம்

காஞ்சிபுரம் தெற்கு 19.1.25 55 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் கூடுவாஞ்சேரி சேவா சமிதியின் சார்பாக, சமிதியில் உள்ள ஷீரடி ஸாய் பாபா விக்ரஹம் பிரதிஷ்டைதினம் 19/01/2025 அன்று வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டது. இந்த விக்ரஹம் 19/01/2008 அன்று பகவானால் ஆசிர்வதிக்கப்பட்டு முதன்முதலில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்த வைபவத்தை கொண்டாடும் விதமாக, மூலவர் ஷீரடி ஸாயி விக்ரஹத்திற்கும் உற்சவ விக்ரஹத்திற்கும் காலை 10:00 மணியளவில் சர்வ அபிஷேகம் நடைபெற்றது. பின்னர் சர்வ அலங்காரம் நடைபெற்றது. இவை நடந்துகொண்டிருக்கையில் சமிதி அங்கத்தினர்கள் மற்றும் பாலவிகாஸ் குழந்தைகள் மிகுந்த பக்தியுடன் வேத பாராயணம் செய்தனர்.

பின்னர் சிறப்பு பஜனை நடைபெற்றது. இறுதியாக பகவானுக்கு மங்கள ஆரத்தி அர்ப்பணிக்கப்பட்டு வருகை தந்த அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.



VEDESH

# தாம்பரம் சமிதியின் 59வது ஆண்டு விழா

காஞ்சிபுரம் தெற்கு | 26.1.25 | 121 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் பாபாவின் ஆசியுடனும் அருளுடனும், தாம்பரம் சமிதியின் 59வது ஆண்டு விழா மிகச் சிறப்பாக 26.01.2025 அன்று கொண்டாடப்பட்டது. காலை 5.15 மணி முதல் 6.30 மணி வரை ஓம்காரம், சுப்ரபாதம் மற்றும் நகரசங்கீர்த்தனம் வைகை நகரில் நடைபெற்றன.

பிறகு காலை 6.30 மணிக்கு பிரசாந்தி கொடியேற்றம் மிகச் சிறப்பாக நடந்தது. மாலை 04.00 அளவில் வேத பாராயணத்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. பின்பு சாய் பஜனை நடைபெற்றது. நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர் திரு கிருஷ்ணன் சாய்ராம் நமது சுவாமியின் போதனைகள் பற்றி எடுத்துரைத்தார்.

பின்பு மற்றொரு சிறப்பு விருந்தினர் திரு ராஜேந்திரன் சாய்ராம், தமிழ்நாடு மாநில சேவை ஒருங்கிணைப்பாளர் மற்றும் திரு ராஜன் சாய்ராம் தமிழ்நாடு தெற்கு இணை சேவை ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் ஸ்ரீ சத்ய சாய் அமைப்பின் சேவை நடவடிக்கைகள் பற்றி உரையாடினர்.

பிறகு பாலவிகாஸ் குழந்தைகளின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் நடனம், நாடகம், சத்சங்கம் ஆகியன மிகச் சிறப்பாக நடந்தன. அடுத்ததாக சமிதியின் உள்ள மூத்த மருத்துவரான திரு சேஷகிரி சாய்ராம் அவர்கள், தான் செய்யும் ஒப்பற்ற மற்றும்

தன்னலமற்ற சேவைப்பணிகளுக்காக கௌரவிக்கப்பட்டார்.

பின்பு தனுர் மாதம் நகரசங்கீர்த்தனத்தில் ஒரு நாள் கூட தவறாமல் கலந்து கொண்ட திரு சதானந்தன் சாய்ராம் அவர்களும் கௌரவிக்கப்பட்டார். இறுதியில் பகவான் பாபாவுக்கு மங்கள ஆரத்தி அர்ப்பணிக்கப்பட்டு நிகழ்ச்சி நிறைவடைந்தது.





Love All, Serve All
Help Ever, Hurt Never

சேவா வாணி

ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)

தமிழ்நாடு - தெற்கு

ஜனவரி 2025

# புதிய பால்விகாஸ் வகுப்பு தொடக்கம்

காஞ்சிபுரம் தெற்கு | 11.1.25 | **25** சேவாதளத்தொண்டர்கள்

சுவாமியின் நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக புதிய பாலவிகாஸ் வகுப்பு ஆரம்பாக்கம் - திருமதி ரேவதி சதீஷ் சாய்ராம் இல்லத்தில் தொடங்கப்பட்டது. காஞ்சி தெற்கு மாவட்ட தலைவர் திரு சங்கரநாராயணன் சாய்ராம், SSSVIP ஒருங்கிணைப்பாளர் திரு பி கே மோகன் சாய்ராம், மாவட்ட சேவை ஒருங்கிணைப்பாளர் திரு நாராயணன் சாய்ராம், தாம்பரம் சமிதி உறுப்பினர் திரு சதானந்தன் சாய்ராம், தாம்பரம் சமிதி ஒருங்கிணைப்பாளர் திரு ரங்கநாதன் சாய்ராம் தாம்பரம் சமிதி கல்வி ஒருங்கிணைப்பாளர் திருமதி சந்தானலட்சுமி சாய்ராம் ஆகியோர் பாலவிகாஸ் வகுப்புகளின் முக்கியத்துவத்தை மாணவ மாணவிகளுடன் பகிர்ந்து கொண்டனர். இதில் மாணவ மாணவிகள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.





## ரங்கோலி கோலங்கள் வரைதல்

காஞ்சிபுரம் தெற்கு | 16.1.25 | 45 பயனாளிகள் | 45 சேவாதளத்தொண்டர்கள்

பாலவிகாஸ் குழந்தைகளின் பெற்றோர்களை ஊக்கப்படுத்தும் வகையில் பாலவிகாஸ் பெற்றோர்கள் கலந்து கொள்ள எதுவாக தங்கள் இல்லங்களில் கோலங்கள் வரைந்து "தைப்பொங்கல் " எனும் தலைப்பில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த ஊக்குவிக்கப்பட்டனர். இதில் பெருமளவில் பெற்றோர்கள் மற்றும் பாலவிகாஸ் குழந்தைகள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். பகவானின் கருணையால் இந்த ரங்கோலி கோல வரைதலில் நமது காஞ்சி தெற்கு மாவட்டத்திலுள்ள நிறைய பாலவிகாஸ் குழந்தைகளும் அன்னையர்களும் பங்குபெற்றனர்.



# ஆங்கில புத்தாண்டு தின சேவை

கரூர் | 1.1.25 | **10** பயனாளிகள் | **3** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் கரூர் மாவட்ட ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்களின் சார்பில், 01/01/2025 அன்று ஆங்கில புத்தாண்டை வரவேற்கும் விதமாக கரூர் சமிதியில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. அதன் பின்னர் சாலையோரங்களில் வசிக்கும் சுமார் 10 பேருக்கு கடுங்குளிரிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள போர்வைகள் வழங்கப்பட்டன.

# சிறப்பு நாராயண சேவை மற்றும் சிறப்பு பஜனை

கரூர் | 5.1.25 | 60 பயனாளிகள் | 10 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் கரூர் மாவட்ட ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்களின் சார்பில், 05/01/2025 அன்று கரூரில் உள்ள அன்பாலயம் என்னும் குழந்தைகள் காப்பகத்தில், காலை வேளையில் நாராயண சேவை நடைபெற்றது. இதில் சுமார் 60 பேர் பயனடைந்தனர். அதன் பின்னர் சிறப்பு பஜனை நடைபெற்றது. பின்னர் அவ்வில்லத்தில் வசிக்கும் அனைவரிடமும் சாய் அன்பர்கள் மகிழ்ச்சியாக உரையாடி அவர்களை சந்தோஷப்படுத்தினர்.



# இலவச கண் பரிசோதனை முகாம்

**கன்னியாகுமரி** 5.1.25 **275** பயனாளிகள்

**44** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களின் தனிப்பெருங்கருணையினால் கன்னியாகுமரி மாவட்டம் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்களின் சார்பில் இலவச கண் பரிசோதனை முகாம் திருநெல்வேலி அரவிந்த் கண் மருத்துவமனையுடன் இணைந்து, 05/01/2025 அன்று வடசேரியில் அமைந்துள்ள எஸ்.எம்.ஆர்.வி மேல் நிலைப் பள்ளி வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

முகாமிற்கான முதன்மை ஏற்பாடுகள் 04/01/2025 அன்று மாலை 03.00 மணி முதல் 06.00 மணி வரை மாவட்ட சாய் அன்பர்களால் மேற்கொள்ளப்பட்டது. 05/01/2025 அன்று காலை 8.30 மணிக்கு பஜனையுடன் சேவை நிகழ்ச்சி தொடங்கியது. 275 பயனாளிகள் பரிசோதிக்கப்பட்டனர். இதில் கண் அறுவை சிகிச்சைக்காக 112 பேர் தேர்வுசெய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் அன்று மாலையே திருநெல்வேலி அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சேவையில் சத்ய சாயி அன்பர்கள் 44 பேர் கலந்து கொண்டனர். மேலும் அனைவருக்கும் நாராயண சேவை வழங்கப்பட்டது. இறுதியாக மதியம் 2:30 மணியளவில் ஆரத்தியுடன் சேவை நிகழ்ச்சி நிறைவடைந்தது.





# நீர் மோர் சேவை

**கன்னியாகுமரி** 12.1.25 **2000** பயனாளிகள்

**22** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களின் தனிப்பெருங்கருணையினால் கன்னியாகுமரி ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்களின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் சுசீந்திரம் ஸ்ரீ தாணுமாலயன் சுவாமி கோவிலின் மார்கழி தேர்த்திருவிழாவை காணவரும் பக்தர்களுக்கு, அவர்களின் தாகத்தை தணிக்க நீர் மோர் கொடுப்பது நமது சாயி அன்பர்களின் வழக்கமாக உள்ளது.

இந்த வருடமும் 11/01/2025 அன்று நீர் மோர் பந்தல் அமைக்கும் இடம் மற்றும் மோர் வழங்குவதற்கான அனைத்து பணிகளும் சாய் அன்பர்களால் தயார் செய்யப்பட்டது. மறுநாள் 12/01/2025 அன்று நீர் மோர் பந்தல் அமைக்கப்பட்டது. காலை 07.00 மணி முதல் பக்தர்களுக்கு நீர் மோர் மற்றும் சுவையான நெல்லிக்காய் ஊறுகாய் வழங்கப்பட்டது.

இறுதியாக திருத்தேர் பவனி முடிந்தவுடன் நண்பகல் 12.00 மணிக்கு ஆரத்தியுடன் சேவை நிகழ்ச்சி மிகச் சிறப்பாக முடிவடைந்தது. இச்சேவையில் 2 பாலவிகாஸ் குழந்தைகள் 8 மகளிர் மற்றும் 12 ஆண்கள் கலந்துகொண்டனர்.




Amul
Amul

# ஸ்ரீ சத்ய சாயி புரத மாவு வழங்குதல்

கன்னியாகுமரி | 09 & 24/01/2025 | **86** பயனாளிகள் | **5** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களின் தனிப்பெருங்கருணையினால் கன்னியாகுமரி மாவட்டம் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்களின் சார்பில் ஒவ்வொரு மாதமும் இரண்டு தவணைகளாக ஸ்ரீ சத்ய சாய் புரத மாவானது தயாரிக்கப்பட்டு கன்னியாகுமாரி மாவட்டம், தேரூரில் அமைந்துள்ள கஸ்தூரிபாய் நடுநிலை பள்ளியின் குழந்தைகளுக்காக கொடுக்கப்படுகிறது. இம்மாதமும் குலசேகரன்புதூர் ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதி சேவாதளத் தொண்டர்களால் கவனத்துடன் தயாரிக்கப்பட்ட சத்து மாவானது 09/01/2025, மற்றும் 24/01/2025 ஆகிய தேதிகளில் பள்ளி நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இம்மாவு ஆசிரியர்களால் குழந்தைகளுக்கு காலை உணவாக சமைத்து பரிமாரப்படுகிறது.



# நாகர்கோவில் சமிதியின் ஆண்டு விழா

கன்னியாகுமரி 1.1.25 73 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களின் தனிப்பெருங்கருணையினால் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் சார்பில் சமிதியின் ஆண்டு விழா மற்றும் பகவானின் நூற்றாண்டு விழா துவக்கமாக 100 பஜனை நிகழ்ச்சி 01/01/2025 அன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

காலை 05.00 மணிக்கு ஓம்காரம் மற்றும் சுப்ரபாதத்தைத் தொடர்ந்து நகர சங்கீர்த்தனம் நடைபெற்றது. பின்பு காலை 07.00 மணிக்கு பிரசாந்தி கொடி ஏற்றப்பட்டது. காலை 08.01 மணிக்கு 100 பஜனை நிகழ்ச்சி மற்றும் அதனைத் தொடர்ந்து ஆன்மீக சொற்பொழிவு அரங்கேறியது ஸாய் தாணுமாலய பெருமாள் அவர்களாலும், ஸாய் சண்முகம் பிள்ளை அவர்களாலும் இந்த சொற்பொழிவானது நிகழ்த்தப்பட்டது.

சொற்பொழிவினை தொடர்ந்து மாநில அளவிலான பாலவிகாஸ் திறன் தேடல் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. இறுதியாக மாலை 06.00 மணிக்கு மகா மங்கள ஆரத்தி பகவானுக்கு அர்ப்பணிக்கப்பட்டதோடு நிகழ்ச்சிகள் இனிதே நிறைவு பெற்றன.

இந்நிகழ்ச்சியில் 18 பாலவிகாஸ் குழந்தைகள், 20 மகளிர் மற்றும் 20 ஆண்கள் கலந்து கொண்டனர்.





# ஆங்கில புத்தாண்டு கொண்டாட்டம்

கன்னியாகுமரி | 1.1.25 | 13 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களின் தனிப்பெருங்கருணையினால் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த குலசேகரன்புதூர் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் சார்பில் 01/01/2025 அன்று சதாப்தி மகா மிருத்யுஞ்சய சாந்தி 2025 (பகவானின் 100 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நடத்தப்படும் 100 சிறப்பு நிகழ்ச்சிகள்) திட்டத்தின் 1 ஆம் நிகழ்வான ஆங்கில புத்தாண்டை வரவேற்கும் விதமாக சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

காலை 05.20 மணிக்கு ஓம்காரம் மற்றும் சுப்ரபாதத்தைத் தொடர்ந்து நகரசங்கீர்தனம் நடைபெற்றது. தொடர்ந்து அஷ்டோத்திரம் பாராயணம் செய்யப்பட்டது. பின்பு சாய் அன்பர்கள் இனிப்புகளை பரிமாறிக் கொண்டு தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டனர்.

இறுதியாக 07.30 மணியளவில் பகவானுக்கு ஆரத்தி அர்ப்பணிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 5 பாலவிகாஸ் குழந்தைகள், 6 மகளிர் மற்றும் 2 ஆண்கள் கலந்து கொண்டனர்.





# மாதாந்திர மகிளா தினம்

**கன்னியாகுமரி** 19.1.25 **17** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களின் தனிப்பெருங்கருணையினால் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த வல்லன்குமாரவிளை ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் சார்பில் மாதாந்திர மகிளா தினத்தை முன்னிட்டு 19/01/2025 அன்று திருவிளக்கு பூஜை மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாலை 06.30 மணிக்கு பூஜை தொடங்கியது, சரியாக 08.00 மணிக்கு பகவானுக்கு ஆரத்தி அர்ப்பணிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 15 மகளிர் மற்றும் 02 ஆண்கள் கலந்துகொண்டனர்.



# காணும் பொங்கல் கொண்டாட்டம்

**கன்னியாகுமரி** 16.1.25 **40** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களின் தனிப்பெருங்கருணையினால் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த குலசேகரன்புதூர் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் சார்பில் 16/01/2025 அன்று சதாப்தி மகா மிருத்யுஞ்சய சாந்தி 2025 (பகவானின் 100 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நடத்தப்படும் 100 சிறப்பு நிகழ்ச்சிகள்) திட்டத்தின் 5 ஆம் நிகழ்வாக பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் சாய் அன்பர்கள் இணைந்து காணும் பொங்கல் பண்டிகையை வெகு சிறப்பாக கொண்டாடினர்.

காலை 10.00 மணிக்கு ஓம்காரம் மற்றும் சாய் காயத்ரி பாராயணத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. தொடர்ந்து பாலவிகாஸ் குழந்தைகள் சாய் காயத்ரி பாராயணம் செய்ய, அலங்காரம் செய்யப்பட்ட குத்துவிளக்கு மற்றும் பொங்கல் அடுப்பு மூத்த சாய் அன்பர்களால் ஏற்றப்பட்டது. பின்பு பாலவிகாஸ் குழந்தைகள் தங்கள் திறமையை வெளிப்படுத்தும் விதமாக ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டு போட்டிகளில் குழந்தைகள் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

மேலும் குழந்தைகளை உற்சாகப்படுத்தும் விதமாக பாலவிகாஸ் குருக்கள் மற்றும் சாய் அன்பர்களும் போட்டிகளில் பங்கு கொண்டனர். நிகழ்ச்சிக்கு அழகு சேர்க்கும் விதமாக பாலவிகாஸ் குழந்தைகள் சாய் அனு ஸ்ரீ மற்றும் சாய் அபர்ணா ஸ்ரீ ஆகியோரது

நடனம் இடம்பெற்றது. மேலும் பாலவிகாஸ் குழந்தைகள் ஆர்வமுடன் பொங்கல் சமைக்க உதவிகளும் செய்து கொடுத்தனர். பின்பு போட்டியில் வெற்றி பெற்ற குழந்தைகள் மற்றும் அன்பர்களுக்கு சமிதி சார்பில் அன்பு பரிசுகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து மதியம் 01.45 மணியளவில் பகவானுக்கு மஹா மங்கள ஆரத்தி அர்ப்பணிக்கப்பட்டது. இறுதியாக பிற்பகல் 02.00 மணிக்கு அனைவருக்கும் நாராயணசேவை வழங்கப்பட்டதோடு நிகழ்ச்சிகள் இனிதே நிறைவு பெற்றன. இந்நிகழ்ச்சியில் 23 பாலவிகாஸ் குழந்தைகள் ,04 பாலவிகாஸ் குருக்கள்,11 பெற்றோர்கள், மற்றும் 02 ஆண்கள் கலந்து கொண்டனர்.





# திருவள்ளுவர் தின சிறப்பு நிகழ்ச்சி

கன்னியாகுமரி | 15.1.25 | 30 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களின் தனிப்பெருங்கருணையினால் கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரன்புதூர் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் சார்பில் 15/01/2025 அன்று சதாப்தி மகா மிருத்யுஞ்சய சாந்தி 2025 (பகவானின் 100 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நடத்தப்படும் 100 சிறப்பு நிகழ்ச்சிகள்) திட்டத்தின் 4 ஆம் நிகழ்வாக திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு குழந்தைகளுக்கு திருக்குறள் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது.

காலை 10.00 மணிக்கு ஓம்காரம் மற்றும் சாய் காயத்ரி பாராயணம் செய்த பின்பு போட்டி தொடங்கியது. போட்டிக்கு முன்னதாக பாலவிகாஸ் குரு, சாய் ஸ்ரீதாராம் அவர்கள் திருவள்ளுவர் குறித்தும் திருக்குறளின் பெருமை குறித்தும் குழந்தைகளுக்கு சிறப்பாக எடுத்துரைத்தார். தொடர்ந்து குழந்தைகள் ஆர்வமுடன் தங்களால் முடிந்த குறள்களை ஒப்புவித்தனர். பாலவிகாஸ் குருக்கள் மற்றும் சாய் அன்பர்கள் குழந்தைகளை உற்சாகமூட்டினர்.

இறுதியாக காலை 11.30 மணிக்கு பகவானுக்கு ஆரத்தி அர்ப்பணிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 24 பாலவிகாஸ் குழந்தைகள் ,03 பாலவிகாஸ் குருக்கள், 01 பாலவிகாஸ் பெற்றோர் மற்றும் 02 ஆண்கள் கலந்துகொண்டனர்.





# 76-வது குடியரசுதினம்

**கன்னியாகுமரி** 26.1.25 **32** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களின் தனிப்பெருங்கருணையினால் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த குலசேகரன்புதூர் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் சார்பில் நமது பாரத நாட்டின் 76-வது குடியரசுதினம் 26/01/2025 அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பபட்டது.

காலை 08.00 மணிக்கு தேசியக் கொடி ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் சாயி அன்பர்களால் மேற்கொள்ளப்பட்டது. சரியாகக் காலை 08.30 மணிக்கு ஓம்கார பாராயணம் செய்தபின், சாயி அன்பர்கள் "அஸதோ மா ஸத் கமய" ஸ்துதி ஜெபிக்கச் சமிதி கன்வீனர் ஸாய் ரமேஷன் பிள்ளை அவர்களால் தேசியக் கொடி ஏற்றப்பட்டது.

பின்பு பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் சாயி அன்பர்கள் தேசிய கொடிக்கு உரிய மரியாதையுடன் வணக்கம் செலுத்தினர். தொடர்ந்து அனைவரும் இனிப்புகள் பரிமாறி தங்கள் வாழ்த்துக்களை ஒருவருக்கொருவர் தெரிவித்துக் கொண்டனர். இறுதியாக 09.20 மணியளவில் பகவானுக்கு ஆரத்தி அர்ப்பணிக்கப்பட்டது.

மாலை 04.00 மணிக்கு பாலவிகாஸ் குரு ஸாய் ராஜாராம் அவர்களால் பாலவிகாஸ் குழந்தைகள், குருக்கள் மற்றும் ஸாய் அன்பர்களுக்கு வேத பயிற்சி வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிகளில் 18

பாலவிகாஸ் குழந்தைகள் ,04 பாலவிகாஸ் குருமார்கள், 03 மகளிர் மற்றும் 02 ஆண்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.



# ஸ்ரீ சத்ய சாயி பிரேம தரு

கன்னியாகுமரி 31.1.25 9 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களின் தனிப்பெருங்கருணையினால் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த குலசேகரன்புதூர் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் சார்பில் 31/01/2025 அன்று சதாப்தி மகா மிருத்யுஞ்சய சாந்தி 2025 (பகவானின் 100 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நடத்தப்படும் 100 சிறப்பு நிகழ்ச்சிகள்) திட்டத்தின் 9ஆம் நிகழ்வாக, பிரேம தரு நிகழ்ச்சி நடைபெற்றது. அன்று மாலை 03.45 மணிக்குச் சமிதி மகிளா அன்பர்களால் குலசேகரன்புதூர் பிள்ளையார் கோவிலின் சுற்றுப்புறம் சுத்தம் செய்யப்பட்டது. பின்பு பாலவிகாஸ் குழந்தைகளால் ஸ்ரீ சத்ய சாயி பிரேம தரு திட்டத்தின் கீழ் 02 மரக்கன்றுகள் நடப்பட்டன. தொடர்ந்து மாலை 05.30 மணிக்குப் பகவானைக்கு ஆரத்தி அர்ப்பணிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 05 பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் 04 மகளிர் கலந்துகொண்டனர்.





# பகவானின் நூற்றாண்டு விழாவிற்கான சிறப்பு நிகழ்ச்சி

கன்னியாகுமரி | 2, 9, 23 & 30/01/2025 | 19 பயனாளிகள் | 19 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் தனிப்பெரும் கருணையுடன் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த குலசேகரன்புதூர் ஸ்ரீ ஸத்ய ஸாய் சேவா சமிதி சார்பில் திட்டமிட்டபடி பகவானின் நூற்றாண்டு விழாவிற்கான சிறப்பு நிகழ்ச்சிகளின் (Program SMS 2025) ஒரு பாகமாக 02/01/2025, 09/01/2025, 23/01/205 மற்றும் 30/01/2025 ஆகிய நான்கு வியாழக்கிழமைகளிலும் பாலவிகாஸ் குழந்தைகளால் 108 முறை ஓம் ஸ்ரீ ஸாய்ராம் பாராயணம் செய்யப்பட்டது.

மேலும் ஒவ்வோரு வியாழனும் ஒரு அஷ்டோத்திரத்தின் விளக்கம் பக்தியில் கோர்த்த நல்முத்துக்கள் புத்தகத்திலிருந்து பாலவிகாஸ் குரு ஸாய் ஸ்ரீதாராம் அவர்களால் குழந்தைகளுக்கு விவரிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தவறாமல் 15 பாலவிகாஸ் குழந்தைகள் 02 பாலவிகாஸ் குருமார்கள் மற்றும் 02 மகளிர்கள் கலந்து கொண்டனர்.



# ஜோதி த்யானம் மற்றும் பஜன் பயிற்சி

**சேலம்** 19.1.25 **80** பயனாளிகள் **80** சேவாதளத்தொண்டர்கள்

சேலம் மாவட்ட அளவிலான ஜோதி த்யானம் மற்றும் பஜனைப் பயிற்சி முகாம் சூரமங்கலம் சமிதியில் 19/01/2025 காலை 09.30 மணி முதல் மாலை 05.30 மணி வரை நடைபெற்றது.

ஜோதி த்யானம், த்யானம் செய்வதன் நோக்கம், த்யானங்களின் வகைகள், நாம, ரூப த்யானம் எவ்வாறு செய்வது ஆகியவை பற்றி மாநில ஆன்மீக ஒருங்கிணைப்பாளர் (ஆண்கள்) திரு.கணபதி சாய்ராம், மற்றும் வெங்கட் சுந்தரம் சாய்ராம் அவர்கள் விரிவாக விளக்கினார்கள்.

சாய் பஜன் செய்வதன் நோக்கம், அதற்கான வழிமுறைகள் முதலியவற்றை ஈரோடு சாய் பிரசாத் குழுவினர் விரிவாக எடுத்துரைத்தார்கள். இந்த நிகழ்ச்சியில் சேலம் மாவட்ட சமிதிகளைச்சார்ந்த சுமார் 80 நபர்கள் ( 25 மகிளாக்கள், 20 பாலவிகாஸ் குழந்தைகள், முன்னாள் பாலவிகாஸ் மாணவர்கள், 7 குருமார்கள் மற்றும் 25 ஆண்கள்) கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

மாலை மஹா மங்கள ஆரத்தியுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.





# திருவிளக்கு பூஜை

சேலம் 24.1.25 **60** பயனாளிகள் **45** சேவாதளத்தொண்டர்கள்

சமிதி அளவிலான திருவிளக்கு பூஜை, சேலம் சூரமங்கலம் சமிதியில் 24/1/25 அன்று காலை 10 மணி முதல் மதியம் 12.30 மணி வரை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பாலவிகாஸ் குருமார்கள், பாலவிகாஸ் குழந்தைகளின் பெற்றோர், சமிதி உறுப்பினர்கள் மற்றும் சமிதியை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள மகிளாக்கள் சுமார் 45 பேர் கலந்துகொண்டனர். இந்த நிகழ்ச்சியில் வேதம், துர்கா, லெக்ஷ்மி, ஸரஸ்வதி, லலிதா மற்றும் சாய் அஷ்டோத்ரங்களுடன் பகவானின் மஹா மங்கள ஹாரதியுடன் திருவிளக்கு பூஜை மதியம் 12.30 மணிக்கு இனிதே நிறைவுற்றது.

பின்னர் அனைவருக்கும் அருட் பிரசாதம் வழங்கப்பட்டது.

# தென்காசி சமிதி ஆண்டு விழா

திருநெல்வேலி | 5.1.25 | **60** பயனாளிகள் | **75** சேவாதளத்தொண்டர்கள்

5.1.25 ஞாயிற்றுக்கிழமை தென்காசி சமிதி ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. காலையில் ஓங்காரம் சுப்ரபாதம், நகர சங்கீர்த்தனம், அஷ்டோத்ரம், பஜனை நடைபெற்றது. தொடர்ந்து சமிதி கன்வீனரின் ஆண்டறிக்கை, மாவட்டத்தலைவர் உரை, கலைநிகழ்ச்சிகள், பரிசு வழங்குதல், மங்கள ஆரத்தி, நாராயண சேவையுடன் நிறைவு பெற்றது. இதில் 30 பாலவிகாஸ் குழந்தைகள், 6 குருமார்கள் , 22 பெற்றோர் மற்றும் சாய் அன்பர்கள் கலந்து கொண்டனர்



# பொங்கல் விளையாட்டு விழா

திருநெல்வேலி 19.1.25 **48** பயனாளிகள்

**52** சேவாதளத்தொண்டர்கள்

19.1.25 ஞாயிற்றுக்கிழமை பாலவிகாஸ் குழந்தைகளின் விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. முதலில் குழந்தைகள் மற்றும் குருமார்களால் காயத்ரி மந்திரம் ஓதுதல் மற்றும் பஜனை நடைபெற்றது. சிறிய மற்றும் பெரிய குழந்தைகள் 2 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு தனித்தனியாக விளையாட்டுக்கள் நடத்தப்பட்டன.

மிகவும் ஆர்வத்துடன் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். பெற்றோர்களுக்கும் அதிர்ஷ்ட விளையாட்டு நடத்தப்பட்டது. பின்னர் மாவட்டத் தலைவர் பரிசுகளை வழங்கினார், இரண்டாம் பிரிவு மற்றும் மூன்றாம் பிரிவு மாணவர்களுக்கு தேர்வுச் சான்றிதழ்கள் மற்றும் கட்டுரைப்போட்டி சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

மங்கள ஆரத்தியுடன் விழா நிறைவு பெற்றது. இதில் 30 பால விகாஸ் குழந்தைகள், 6 குருமார்கள் மற்றும் 12 பெற்றோர் கலந்து கொண்டனர்

# பால விகாஸ் சாதனா முகாம்

விருதுநகர் 5.1.25 **75** பயனாளிகள்

**80** சேவாதளத்தொண்டர்கள்

ராஜபாளையம் அய்யனார் கோவில் சிவானந்தா ஆசிரமத்தில் பால விகாஸ் சாதனா முகாம் நடைபெற்றது. அதில் ஜோதி தியானம், நீதிநெறி கதைகள்,மதிப்பீட்டு விளையாட்டுகள் , நாமஸ்மரணையின் முக்கியத்துவம், பால விகாஸ் குழந்தைகள், குருமார்கள், மற்றும் பெற்றோர்களுடன் கலந்துரையாடல் ஆகியவை நடைபெற்றன. இதில் 40 பால விகாஸ் குழந்தைகள் 13 குருமார்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

மேலும் 26/1/2025 ஞாயிற்றுக்கிழமை பாலவிகாஸ் குழந்தைகளுக்கு வேத பயிற்சி வகுப்பு சமிதியில் வைத்து நடைபெற்றது. இதில் 20 குழந்தைகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு வேதம் பயின்றனர். மாவட்ட வேதா ஒருங்கிணைப்பாளர் பயிற்சி அளித்தார்.



# ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம பாராயணம்

ஈரோடு 1.1.25 **103** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெரும் கருணையால் சுவாமியின் 100-வது பிறந்தநாள் வைபவ நிகழ்ச்சிகளில் ஒன்றாக ஈரோட்டில் உள்ள மகிளா அன்பர்கள் இல்லங்களில் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம பாராயணம் நடைபெற்று வருகிறது.

அந்த வரிசையில் 26/11/24 – திருமதி.உமையாள் இல்லத்தில் – 33 பேர், 17/12/24 – திருமதி. மீனாட்சி இல்லத்தில் – 11 பேர், 3/1/25 – திருமதி.மஞ்சுளா இல்லத்தில் – 21 பேர், 17/1/25 – திருமதி.விசாலாட்சி இல்லத்தில் – 14 பேர், 24/1/25 – திருமதி சித்ரா இல்லத்தில் – 9 பேர், 28/1/25 – திருமதி.சாய் லட்சுமி இல்லத்தில் – 15 பேர் மகிளா அன்பர்கள் பாராயணம் செய்தனர்.

ஜனவரி மாதம் முடிவில் 6 மகிளா அன்பர்கள் இல்லத்தில் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம பாராயணம் செய்து முடிக்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த வாய்ப்பை ஏற்படுத்தி தந்த நம் சுவாமிக்கு அநேக நமஸ்காரங்கள்.





# வாசகர் வட்டம்

ஈரோடு 3.1.25 25 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெரும் கருணையினால் 3.1.2025 வெள்ளிக்கிழமை 7:15 pm முதல் 8:00 மணி வரை இணைய வழியில் சத்சங்கம் டாக்டர். என்.வி.கோவிந்தராஜு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இதில் மனம், உடம்பு மற்றும் எண்ணங்களை எப்படி கட்டுப்படுத்துவது, குருவிற்கு சீடனுக்கும் உள்ள வேற்றுமை என்ன என்பது பற்றி டாக்டர்.என்.வி.கோவிந்தராஜு மற்றும் டாக்டர்.டி.எஸ்.பாலகிருஷ்ணன் இருவரும் அழகாக விளக்கினார்கள்.

இதில் 20 அன்பர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். ஞாயிறு 26.1.2025 அன்று கீதா வாஹினி அத்தியாயம் 13-ல் வாசகர் வட்டம் பகுதி-7 இணைய வழியின் நடைபெற்றது. இதில் 25 அன்பர்கள் பங்கு பெற்றனர். டாக்டர்.டி.எஸ்.பாலகிருஷ்ணன் அவர்கள் மாயையை வெல்வது எப்படி என அழகாக விளக்கினார்.

இணைய வழி சத்சங்கங்கள் நல்ல முறையில் நடைபெற ஆசி புரியும் நம் சுவாமிக்கு அனந்தகோடி நமஸ்காரங்கள்.

# சிறப்பு பஜன்

ஈரோடு 6.1.25 **50** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் ஆசிகளோடு 6.1.2025 அன்று அருள்மிகு பாரியூர் கொண்டத்துகாளியம்மன் கோவிலில் “சந்தன காப்பு” அலங்காரத்தின் பொழுது “சாய் பக்தி கீர்த்தனைகள்” என்ற நிகழ்ச்சியில் சாயி பஜனை பாடல்கள் பாடப் பெற்றன. இதில் சித்தோடு மற்றும் ஈரோடு சாயி அன்பர்கள் திரளாக வந்திருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அன்னையின் ஆசிகளைப் பெற்றனர். இதில் மொத்தம் 50க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

15 ஆண்டுகளாக தொடர்ந்து சிறப்பு பஜன் செய்து வரும் பாக்கியத்தை அளித்து வரும் நம் சாய்நாதனுக்கு அனந்த கோடி நமஸ்காரங்கள்.



# வைகுண்ட ஏகாதசி சிறப்பு பஜன்

ஈரோடு 10.1.25

வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு சிறப்பு பஜன் பகவானின் அருளால் ஈரோடு சித்தோடு சமிதியில் வெள்ளிக்கிழமை 10.1.205 அன்று மாலை 6 மணிக்கு தொடங்கி 11.1.2025 சனிக்கிழமை காலை 4:00 மணி வரை சிறப்பாக நடைபெற்றது. அதனை தொடர்ந்து 5.20 மணிக்கு ஓம்கார சுப்ரபாதம், நகர சங்கீர்த்தனம் சிறப்பாக நடைபெற்றது. சத்தியமங்கலம் சமிதி, ஈரோடு மெயின் சமிதி ஆகிய இடங்களிலும் சிறப்பு பஜனை செய்யப்பட்டது. இந்த வாய்ப்பை அளித்த பகவானுக்கு அனந்த கோடி நமஸ்காரங்கள்.



# கரிய பெருமாள் கோயில் சேவை

ஈரோடு | 10.1.25 | 24 சேவாதளத்தொண்டர்கள்

ஈரோடு ஸ்ரீ கரிய பெருமாள் கோவிலில் வைகுண்ட ஏகாதசி (10.1.2025) அன்று பக்தர்களின் கூட்டத்தை கட்டுப்படுத்தும் சேவைபுரிய சாயி சேவாதள தொண்டர்களுக்கு வாய்ப்பு கிட்டியது. இதில் 24 ஆண்கள் மற்றும் மகிளா அன்பர்கள் கலந்து கொண்டு சேவை புரிந்தனர். இந்த அரிய வாய்ப்பை அளித்த சாயிநாதனுக்கு அனந்த கோடி நமஸ்காரங்கள்.





## நகர சங்கீர்த்தனம்

ஈரோடு

16.12.24 – 13.1.25

பகவானின் பெரும் கருணையினால் (16.12.24 – 13.1.25) மார்கழி மாதம் முழுவதும் மூலப்பாளையம் பாரதி நகர் விநாயகர் கோவில் மற்றும் சித்தோடு சமிதியிலும் நகர சங்கீர்த்தனம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த மாதம் முழுவதும் பங்கு கொண்ட அனைத்து சாயி அன்பர்களுக்கு பகவானின் ஆசிகள் கிடைக்க வேண்டிக்கொள்கிறோம். மார்கழி மாத தினசரி நகர சங்கீர்த்தனம் சிறப்பாக நடைபெற அருளிய நம் சுவாமிக்கு அனந்தகோடி நமஸ்காரங்கள்.

# பொங்கல் பண்டிகை கொண்டாட்டங்கள்

ஈரோடு 14.1.25

பகவானின் பெரும் கருணையினால் 14.1.2025 பொங்கல் தினத்தை முன்னிட்டு சிறப்பு பஜனை ஈரோடு சமிதிகளில் நடைபெற்றது. இந்த சிறப்பு பஜனையில் சாயி அன்பர்கள் கலந்து கொண்டு பகவானின் பேரருளைப் பெற்று மகிழ்ந்தனர். ஸ்ரீ சத்யசாய் பள்ளி சித்தோட்டில் பள்ளி மாணவ செல்வங்கள் விமர்சையாக பொங்கல் பண்டிகையை கொண்டாடினர்.

அந்தியூர் மலைப்பகுதி கொங்காடை கிராமத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 14.1.2025 அன்று பாலவிகாஸ் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள், குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் வைத்து பரிசுகள் வழங்கப்பட்டன.

காந்திநகர் சமிதியின் தத்து கிராமமான செங்கோடம்பள்ளத்தில் பொங்கல் பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டது. பாலவிகாஸ் பெண் குழந்தைகள் மற்றும் குரு அவர்களால் பொங்கல் வைக்கப்பட்டது. இந்த வாய்ப்பை அளித்த நம் சுவாமிக்கு நமஸ்காரங்கள்.





# பழனி பாதயாத்திரை சேவை

ஈரோடு 15.1.25 **4000** பயனாளிகள்

**56** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெரும் கருணையினால் வருடா வருடம் தொடர்ந்து நடத்தப்பட்டு வரும் பழனி பாதயாத்திரை செல்பவருக்கான சேவை இந்த வருடம் 15/1/2025 புதன்கிழமை ஈரோடு மூலப்பாளையம், பூந்துறை ரோடு நகர் நுழைவாயில் எதிரில் நடைபெற்றது.

காலை 5 மணி முதல் சுக்கு காபி, பிஸ்கட், நீர் மோர் மற்றும் மருத்துவ சேவைகள் அனைத்தும் சிறப்பாக செய்யப்பட்டன. இதில் மூலப்பாளையம், லட்சுமி கார்டன், காந்திநகர், ஈரோடு மெயின் சமிதி என அனைத்து சமிதிகளில் இருந்தும் சாயி அன்பர்கள் வந்திருந்து சேவை புரிந்தனர். இதில் ஆண்கள்-25, மகளிர் அன்பர்கள்-23, பாலவிகாஸ் குழந்தைகள்-8 என மொத்தம் 56 அன்பர்கள் காலை 5:00 மணி முதல் மாலை வரை சேவை புரிந்தனர்.

இதில் 4 கிலோ சுக்கு காபி, 5000 ரொட்டிகள், பிஸ்கட – 2 பெட்டிகள், கடலை மிட்டாய்-500, ஆரஞ்சு மிட்டாய் – 3 பெட்டிகள், சிப்ஸ் 10 கிலோ, மின்ட் மிட்டாய்- 3 பெட்டிகள், கால் வலி மாத்திரைகள்-5000 மற்றும் இருமல் மருந்து 1500 என 4000 -க்கும் மேற்பட்ட பாதயாத்திரை நண்பர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த வாய்ப்பை அருளிய நம் சாயிநாதனுக்கு அநேக கோடி நமஸ்காரங்கள்.






# சாயி ப்ரேம தரு

ஈரோடு | 19.1.25 | 8 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் கருணையினால் சென்னிமலையில் 19.1.2025 அன்று 60 மரக்கன்றுகள் நடப்பட்டன. இதில் 8 ஆண்கள் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நடும் சேவையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். இந்த வாய்ப்பை அளித்த நம் சுவாமிக்கு நமஸ்காரங்கள்.

# நாராயண சேவை

ஈரோடு 19.1.25 **588** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் ஆசிகளோடு (19.1.2025) மகிளா தினத்தன்று திருநகர் காலனி சமிதி அன்பர்கள் நாராயண சேவை செய்தனர். பேருந்து நிலையம் அருகில் உள்ள மக்களுக்கு சாப்பாடு பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

இதில் 588 அன்பர்கள் பயன் பெற்றனர். இந்த நாராயண சேவையில் கலந்து கொண்டு சேவை புரிந்த அனைவருக்கும் பகவானின் அருள் கிடைக்க பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

இதைபோல் குடியரசு தினத்தை முன்னிட்டு திருமதி.ராஜாராம் அவர்கள் குடும்பத்தின் சார்பில் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் சமிதி மற்றும் விண்ணப்பள்ளி அரசு மறுவாழ்வு மையத்திலும் 26.1.2025 மதியம் நாராயண சேவை மிக சிறப்பாக நடைபெற்றது.

இதில் 15 ஆண்கள், 16 மகிளா அன்பர்கள் மற்றும் 3 குழந்தைகள் என 34 அன்பர்கள் கலந்து கொண்டனர். இதில் 120 பேர் பயன் பெற்றனர். இந்த வாய்ப்பை அளித்த பகவானுக்கு அனந்த கோடி நமஸ்காரங்கள்.




3 PASS

# பஜனா மண்டலி

ஈரோடு 19.1.25

பகவானின் பெரும் கருணையால் இந்த ஆண்டு தொடக்கத்தில் (19.1.2025) புதிய பஜனா மண்டலி "கிரீன் பார்க்" என்ற இடத்தில் திருமதி.கோமதி அவர்கள் இல்லத்தில் கோலாகலமாக தொடங்கப்பட்டது. சத்தியமங்கலம் சமிதியில் இருந்து பக்தர்கள் சுவாமியின் அங்கியை கண்ணாடி பேழைக்குள் வைத்து வேத மந்திரங்கள் ஓத புதிய பஜனா மண்டலி அரங்கில் நுழைய சுவாமியே வந்து தொடங்கி வைத்தது போல மெய்சிலிர்க்கும் அனுபவத்தை அங்கிருந்த அனைவரும் உணர்ந்தனர்.

குத்து விளக்கு ஏற்றி ஓம்காரம் சொல்லி 2 மணி நேரம் மிக அருமையாக பஜனைகள் பாடப்பட்டன. மாவட்ட மகிளா சேவா பொறுப்பாளர் திருமதி.லீலாவதி, திரு.வெள்ளியங்கிரி, திரு.லேனா ராமநாதன் அனைவரும் சாயி அனுபவங்கள் பற்றி எடுத்துரைத்தனர்.

மாவட்ட தலைவர் திரு.அண்ணாமலை அவர்கள் புதிய பஜனா மண்டலி கன்வீனரை அறிமுகப்படுத்தி வைத்தார். புதிய பஜனா மண்டலி கன்வீனர் திரு.பிரபு தனக்கு பர்த்தி சேவையில் ஏற்பட்ட அனுபவத்தை பகிர்ந்தார். சுவாமியின் மஹா மங்கள ஹாரத்திக்கு பின் நாராயண சேவை வழங்கப்பட்டது. இதில் 139 சாயி அன்பர்கள் கலந்து கொண்டு பகவானின் அருளுக்கு தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர்.

# திருவிளக்கு பூஜை

ஈரோடு | 24.1.25 | 20 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெரும் கருணையினால் தை வெள்ளிக்கிழமை 24.1.2025 மாலை 6:30 மணிக்கு ஈரோடு மெயின் சமிதியில் திருவிளக்கு பூஜை சிறப்பாக நடைபெற்றது. பழனிபுரம் சமிதியிலும் திருவிளக்கு பூஜை சிறப்பாக நடத்தப்பட்டது. இதில் 20 மகிளாக்கள் கலந்து கொண்டனர். 31/1/2025 அன்று காந்திநகர் சமிதியில் திருவிளக்கு பூஜை நடைபெற்றது. இதில் 18 மகிளா அன்பர்கள் கலந்து கொண்டு சாயி மாதாவின் அருளைப் பெற்றனர்.





## 2025 - புத்தாண்டு கொண்டாட்டம்

**கோயம்புத்தூர்** 1.1.25 **39** சேவாதளத்தொண்டர்கள்

ஸ்வாமியின் பெருங்கருணையினால் கோயம்புத்தூர் மாவட்ட சாய் பக்தர்கள் இந்த புத்தாண்டினை (1.1.2025) ஸ்வாமியின் வாசஸ்தலம் ஆகிய சாய் ஸ்ருதி, கொடைக்கானலில் கொண்டாடினார்கள்.

சாய் பஜனை, ஸ்ரீ சத்திய சாயி பஞ்சரத்தின கீர்த்தனைகள், பக்தி படல்கள் , பாலவிகாஸ் மாணவர்களின் கலை நிகழ்ச்சி போன்ற பல ஆன்மீக நிகழ்ச்சிகளை சாய் ஸ்ருதியில் நிகழ்த்தி இந்த புத்தாண்டை தொடங்கினார்கள். இதில் சுமார் 39 பக்தர்கள் கலந்து கொண்டு தங்களது பக்தியினை ஸ்வாமிக்கு சமர்ப்பித்தார்கள்

# 100 பஜனை பாடல்கள்

கோயம்புத்தூர் 5.1.25

ஸ்வாமியின் பெருங்கருணையினால் கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் சார்பாக 05.01.25 அன்று பகவானின் நூற்றாண்டு விழா சிறப்புப் நிகழ்ச்சியாக ஸ்வாமிக்கு 100 பஜனை பாடல்கள் சமர்ப்பிக்கும் நிகழ்ச்சியானது நடைபெற்றது. இதில் பொள்ளாச்சி சமிதி பக்தர்களும் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் பஜனை பாடகர்களும் கலந்து கொண்டார்கள்.

# வைகுண்ட ஏகாதசி சேவை

கோயம்புத்தூர் 10.1.25 **55** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பரிபூரண ஆசியினால் வைகுண்ட ஏகாதசி பெருநாளை முன்னிட்டு (10.01.2025) கோவை ராம்நகரில் உள்ள ஸ்ரீ கோதண்ட ராமர் ஆலயத்தில் அதிகாலை 4.30 மணி முதல் இரவு 10மணி வரை கோவை மாவட்டத்தை சார்ந்த சாய் சேவாதள தொண்டர்கள் ஆலயத்திற்கு வரும் பக்தர்களை வரிசையில் நெறிப்படுத்தி சுவாமி தரிசனம் செய்வித்து மற்றும் அவர்களுக்கு பிரசாதம் விநியோகமும் செய்தனர்.

இந்த உன்னத சேவைப்பணியில் கோவை ராமநாதபுரம், சாய் பாபா காலனி,வடவள்ளி, சிவனந்தா காலனி, வீரபாண்டி, பீளமேடு, RS புரம், ரேஸ் கோர்ஸ், கணபதி,
குனியமுத்தூர்,சிங்காநல்லூர்,மற்றும் சாமிசெட்டிபாளையம் சமிதிகளை சார்ந்த 38 மகிளாக்கள்,17 ஆண்கள், மொத்தம் 55 சேவாதள தொண்டர்கள் சிறப்பான முறையில் சேவை செய்து பகவானின் இறை அருளுக்கு பாத்திரமானர்கள்.



# அன்னபூரணி பேட்டை சமிதி - வைகுண்ட ஏகாதசி சிறப்பு பஜனை

கோயம்புத்தூர் 10.1.25 **22** சேவாதளத்தொண்டர்கள்

பகவானது பெரும் கருணையால் வைகுண்ட ஏகாதசியின் சிறப்பு நிகழ்ச்சியாக 10.01.2025 அன்று இரவு 9.00 முதல் 11.01.2025 காலை 6.00 வரை மேட்டுப்பாளையம் சமிதிகளின் சார்பில் அன்னபூரணி பேட்டை சமிதியில் சிறப்பு பஜனை நடைபெற்றது. இதில் 22 பக்தர்கள் கலந்து கொண்டார்கள். 12 ஆண்கள், 10 மஹிளாக்கள் கலந்து கொண்டார்கள்.



# அஞ்சுகம் நகர் கிராமத்தில் மகிளா மற்றும் பாலவிகாஸ் குழந்தைகள் சங்கமம்

கோயம்புத்தூர் 10.1.25 8 சேவாதளத்தொண்டர்கள்

ஸ்வாமியின் பெருங்கருணையினால் கோயம்புத்தூர் மாவட்ட மகிளா யுவதிகள் அணியினர் 19.01.2025 அன்று கணபதி சமிதியினரால் தத்தெடுக்கப்பட்ட கிராமமான *அஞ்சுகம் நகர் கிராமத்தில்* மகிளா மற்றும் பாலவிகாஸ் குழந்தைகளுக்கு ரங்கோலி போட்டி மற்றும் விளையாட்டு போட்டிகளை நடத்தியது. கிராமத்தில் இருந்து 15 பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் 45 மகிளாக்கள் (பாலவிகாஸ் குழந்தைகளின் தாய்மார்கள் உட்பட) பங்கேற்றனர்.

வேத பாராயணம் மற்றும் பஜனைகள் பாடிய பின்னர் ரங்கோலி போட்டி மற்றும் குழந்தைகள் மற்றும் மகிளாகளுக்கான பிற விளையாட்ட போட்டிகள் நடத்தப்பட்டன.

கணபதி, வடவள்ளி, ஆர்.எஸ்.புரம், ராமநாதபுரம், குனியமுத்தூர் ஆகிய சமிதிகளைச் சேர்ந்த 6 மகிளா யுவதிகள், 2 பாலவிகாஸ் குருமார்கள், 1 பாலவிகாஸ் மாணவர் பங்கேற்றனர்.

# சிறப்பு பஜனை

கோயம்புத்தூர் 21.1.25 **70** பயனாளிகள்

**70** சேவாதளத்தொண்டர்கள்

ஸ்வாமியின் பெருங்கருணையினால் கோயம்புத்தூர் மாவட்டம் வடவள்ளி சமிதி 21.01.2025 அன்று ராம் நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கோதண்ட ராமஸ்வாமி திருக்கோவில் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த பிரவசன மண்டபத்தில் ஒரு பொது நிகழ்ச்சியாக சாய் பஜன் நடத்தினார்கள். இந்த நிகழ்ச்சியில் சுமார் 70 பக்தர்கள் கலந்து கொண்டனர்.





# பாலவிகாஸ் குழந்தைகளுக்கான விளையாட்டு போட்டி

கோயம்புத்தூர் 16.1.25 **68** பயனாளிகள்

**55** சேவாதளத்தொண்டர்கள்

ஸ்வாமியின் பெருங்கருணையினால் கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி சாய்மதுரம் சமிதியில் 16.01.2025 அன்று பாலவிகாஸ் குழந்தைகளுக்கான விளையாட்டு போட்டிகள் மாலை 4.30 மணி முதல் 6 மணி வரை நடைபெற்றன. இதில் பாலவிகாஸ் குழந்தைகள் 22 பேர் பங்கேற்றனர். அச்சமயம் ஆண்கள் 15 நபர்கள் பெண்கள் 20 நபர்கள் மற்றும் பாலவிகாஸ் பெற்றோர்கள் 20 என மொத்தம் 55 நபர்கள் கலந்து கொண்டார்கள். இதில் அனைவரும் கலந்து கொண்டு 18 நபர்கள் பரிசுகளைப் பெற்றனர்.





# திருவிளக்கு பூஜை

நாமக்கல் 24.1.25 140 பயனாளிகள்

160 சேவாதளத்தொண்டர்கள்

24.01.25 (தை இரண்டாம் வெள்ளிக்கிழமை) முற்பகல் 10.00 - 12.00 மணி வரை திருச்செங்கோடு ஸ்ரீ சத்ய சாயி மந்திரில் திருவிளக்கு பூஜை சிறப்பாக நடைபெற்றது; 35 மஹிளாக்கள் கலந்து கொண்டனர். வித்யா விகாஸ் பொறியியல் கல்லூரியில் நடந்த திருவிளக்கு பூஜையில்; கல்லூரி மாணவிகள் உட்பட 90 மஹிளாக்கள் கலந்து கொண்டனர்.வேலகவுண்டம்பட்டி கிருபா அவர்கள் இல்லத்திலும் திருவிளக்கு பூஜை சிறப்பாக நடைபெற்றது. 15 மஹிளாக்கள் கலந்து கொண்டனர்.





# 100 வீடுகளில் பஜனை மற்றும் தை வெள்ளி திருவிளக்கு பூஜை

தூத்துக்குடி

ஸ்வாமியின் 100வது பிறந்த நாளை முன்னிட்டு 100 வீடுகளில் பஜனை மற்றும் தை வெள்ளி திருவிளக்கு பூஜை நடைபெற்றது





# மருத்துவமனை சேவை

திருவண்ணாமலை | 5.1.25 | **144** பயனாளிகள் | **6** சேவாதளத்தொண்டர்கள்

5.1.25 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி அளவில் திருவண்ணாமலை மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி / அரசு மாவட்ட மருத்துவமனை யில் உள் நோயாளிகளை சந்தித்து ஆறுதலாக பேசியும், நோய் பூரண குணமடைய பிரார்த்தனை செய்தும் பகவானுடைய திருவுருவப்படம், விபூதி, மற்றும் பிரசாதமாக மேரி பிஸ்கட் ஆகியன144 உள் நோயாளிகளுக்கு திருவண்ணாமலை சமிதியின் சார்பாக வழங்கப்பட்டன.





# கிராமத்தில் பகவானின் பல்லக்கு சேவை நாராயண சேவை வஸ்திரதானம்

திருவண்ணாமலை | 11.1.25 | 300 பயனாளிகள் | 12 சேவாதளத்தொண்டர்கள்

நமது பகவானின் அருட்பெரும் கருணையினால் திருவண்ணாமலை மாவட்டம் வைப்பூர் கிராமத்தில் மார்கழி மாதத்தில் சிறப்பு நகர சங்கீர்த்தனம் தொடர்ந்து நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக 11.1.2025 சனிக்கிழமை காலை 11 மணியளவில் நமது பகவானின் பல்லக்கு சேவை மிகச் சிறப்பாக நடைபெற்றது. 15 ஆண்கள் 40 மகளிர் ஆக மொத்தம் 55 நபர்கள் கலந்து கொண்டனர் சிறப்பு விருந்தினராக விழுப்புரம் மாவட்ட தலைவர் கலந்து கொண்டு சிறப்பித்தார், 6 ஏழை எளிய மக்களுக்கு புத்தாடை வழங்கியும் 300 நபர்களுக்கு நாராயண சேவை வழங்கியும், வீடு தோறும் பகவானின் சனாதன சாரதி, திருவுருவப்படம், மற்றும் விபூதி பிரசாதம் ஆகியன வழங்கியும் மங்கள ஆரத்தியுடன் சிறப்பாக முடிவுற்றன.





# நகர சங்கீர்த்தனம் பகவானின் பல்லக்கு சேவை

திருவண்ணாமலை 12.1.25 6 சேவாதளத்தொண்டர்கள்

நமது பகவானின் அருட்பெரும் கருணையினால் திருவண்ணாமலை ஸ்ரீ சத்யசாய் சேவா சமிதியின் தாமரை நகரில் மார்கழி மாதத்தில் சிறப்பு நகர சங்கீர்த்தனம் தொடர்ந்து நடைபெற்று வந்தது. இதன் தொடர்ச்சியாக 12.1.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் நமது பகவானின் பல்லக்கு சேவை மிகச் சிறப்பாக நடைபெற்றது. 10 ஆண்கள் 20 மகளிர் ஆக மொத்தம் 30 நபர்கள் கலந்து கொண்டனர். மற்றும் வீடு தோறும் பகவானின் சனாதன சாரதி, திருவுருவப்படம், மற்றும் விபூதி பிரசாதம் ஆகியன வழங்கியும் மங்கள ஆரத்தியுடன் சிறப்பாக முடிவற்றன



# மஹிளா பஜனை

திருவண்ணாமலை 11.1.25

11.1.25 வேங்கிக்கால் சமிதி சார்பில் மஹிளா பஜனை இனிதே நடந்தது. இதில் 8 மகிளாஸ், 10 பாலவிகாஸ் குழந்தைகள் 2 சேவாதளர்கள் கலந்துகொண்டனர்.



# மாட்டுப் பொங்கலை முன்னிட்டு கோ பூஜை

திருவண்ணாமலை | 15.1.25 | 35 பயனாளிகள்

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி சமிதியின் சார்பாக நமது அன்பிற்குரிய பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாய் பாபா அவர்களின் ஆசிர்வாதங்களுடன், 15.01.2025 புதன்கிழமை மாட்டுப் பொங்கலை முன்னிட்டு ஆரணி வாழப்பந்தல் ரோட்டில் அமைந்துள்ள போதிமரம் முதியோர் இல்லத்தில் வளர்க்கப்படும் பசு மாடு மற்றும் அதன் கன்றுக்குட்டிக்கு கோ பூஜை நடைபெற்றது. இதில் சமிதி உறுப்பினர்கள் மற்றும் பாலவிகாஸ் வகுப்பு மாணவர்கள் பங்கேற்றனர். பூஜையின் முடிவில் மங்கள ஆரத்தி நடைபெற்றது. இல்லத்தில் வசிக்கும் 35 முதியோர்களுக்கு கரும்பு மற்றும் பிஸ்கெட் வழங்கப்பட்டது.





# பொங்கலை முன்னிட்டு பாலவிகாஸ் தைத்திருநாள் விழா

**திருவண்ணாமலை** 13.1.25 **50** பயனாளிகள்

நமது சமிதியில் பாலவிகாஸ் வகுப்பு குழந்தைகளால் தைத்திருநாள் விழா கொண்டாடப்பட்டது. சமிதியில் பொங்கல் வைத்து கதிரவனுக்கு அர்ப்பணித்து மங்கள ஆரத்தி நடைபெற்றது. இந்த விழாவில் 50 பாலவிகாஸ் வகுப்பு குழந்தைகள் பங்கு பெற்றனர்






# காது மூக்கு தொண்டை மருத்துவமுகாம்

**திருவண்ணாமலை** 19.1.25 **76** பயனாளிகள்

**20** சேவாதளத்தொண்டர்கள்

திருவண்ணாமலை சமிதியின் சார்பாக 19.1. 2025 அன்று வைப்பூர் கிராமத்தில் காது மூக்கு தொண்டை தொடர்பான பரிசோதனை முகாம் நடைபெபெற்றது. 76 நோயாளிகள் வருகை தந்தனர். இதில் பத்து நபர்கள் காது கேட்கும் கருவி பொருத்துவதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.இதற்கான காது கேட்கும் கருவி அடுத்த வாரம் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்படும் மேலும் முகாமுக்கு திருவண்ணாமலை சமிதி மற்றும் பஜனா மண்டலையின் சார்பாக மகிலா 9 ஆண்கள் 11 மொத்தம் 20 சேவா தள தொண்டர்கள் கலந்து கொண்டனர்



# தை மாதம் வெள்ளிக்கிழமையினை முன்னிட்டு திருவிளக்கு பூஜை

திருவண்ணாமலை 24.1.25

ஸ்ரீ சத்யசாய் சேவா சமிதி திருவண்ணாமலை சார்பாக 24.1.2025 தை மாதம் வெள்ளிக்கிழமையினை முன்னிட்டு திருவிளக்கு பூஜை மிகச்சிறப்பாக நடைபெற்றது இதில் மகிளா 20 பால விகாஸ் குழந்தைகள் 3 ஆக மொத்தம் 23 நபர்கள் கலந்து கொண்டனர்





# பொங்கலை முன்னிட்டு பாலவிகாஸ் தைத்திருநாள் விழா

திருவண்ணாமலை 26.1.25

பகவானின் பேரருளால் வேங்கிக்கால் சமிதி சார்பில் (26.1.25) முன்னாள் மாவட்ட சேவை ஒருங்கிணைப்பாளர் கள் திரு ஜெயபால் சாய்ராம் மற்றும் திருமதி. கீதாஞ்சலி சாய்ராம் முன்னிலையில் பெற்றோர் ஆசீர்வாதத்துடன் 15 பேர்களை கொண்டு கணினி பயிற்சி ஐந்தாவது குழு தொடங்கப்பட்டது. முன்னாள் மாணவி ராகவிப்ரியா வகுப்பின் தன்மையை விளக்கினார். ஆசிரியர் திரு. மதிவாணன் வகுப்பை தொடர்ந்தார்.

# தை மாத திருவிளக்கு பூஜை

திருவண்ணாமலை 31.1.25

பகவானின் பேரருளால் 31.1.25 அன்று வேங்கிக்கால் சமிதி சார்பில் காஞ்சி தேவனாந்தல் கிராமத்தில் வெகு விமர்சையாக "தை மாத திருவிளக்கு பூஜை" நடைபெற்றது. 90 க்கும் மேற்பட்ட மகளிர் பங்கேற்று விளக்கு பூஜை செய்து மகிழ்ந்தனர். விளக்கு பூஜையின் முக்கியத்துவம் மற்றும் மிக அமைதியான ஆனந்தமான முறையில் முழு அர்த்தத்தை விளக்கி ஜோதி தியானம் ஆகியன செய்துவைக்கப்பட்டு பகவானுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டது

பகவானின் ஆசியோடு ஊர் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் "காஞ்சி தேவனாந்தல்" கிராமத்தை வேங்கிக்கால் சமிதியின் தத்தெடுக்கப்பட்ட கிராமமாக அறிவிக்கப்பட்டு பகவானுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டது. கிராம முன்னேற்றத்திற்காக கிராம முக்கியஸ்தர்களுடன் வேங்கிக்கால் சமிதி அன்பர்கள் முன்னிலையில் ஆலோசனை நடத்தப்பட்டது.



# சிறப்பு கூட்டம்

திருப்பூர் 19.1.25 **40** சேவாதளத்தொண்டர்கள்

நமது அன்பு தெய்வம் பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா அவர்களுடைய பெருங்கருணையினால் 19-01-25 அன்று, சுவாமியின் நூறாவது தின வைபவத்தை எவ்வாறு சிறப்பாக கொண்டாட போகிறோம் என்பது பற்றி திருப்பூர் மாவட்ட பொறுப்பாளர்கள், சமிதி கன்வீனர்கள், பஜனா மண்டலி பொறுப்பாளர்கள்,என அனைவரும் இவ்வருடத்திற்கான திட்டங்களை தயாரித்து பகவானின் திருவடிகளில் சமர்ப்பித்தனர்.

இந்நிகழ்ச்சி காலை 9.30 மணிக்கு பஜன் ஜோதி தியானம் திருப்பூர் மாவட்ட தலைவரின் வரவேற்புரை, முன்னாள் தேசிய தலைமை பண்பு திட்ட மாணவர்களின் ஆசைக்கு ஒரு உற்சவரம்பு எனும் தலைப்பில் கலந்துரையாடல், மற்றும் திருப்பூரில் தற்பொழுது வாகினி சுதா அமிர்த வகுப்பில் பயிலும் சாயி சகோதரிகள் வாகினி சுதாமிர்தம் பற்றிய கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது

திருப்பூர் மாவட்ட பொறுப்பாளர்கள், சமிதி அமைப்பாளர்கள் நூறாவது பிறந்த தின நிகழ்ச்சிகளை பகவான் பொற்பாதங்களில் சமர்ப்பித்தனர்.

மேற்கண்ட நிகழ்ச்சியில் மொத்தம் 82 பேர் ஆண்கள் 46 மகிளாஸ் 36 பேர் கலந்து கொண்டனர். பகவானின் பரிபூரண ஆசியுடன் 19.01.2025-ம் தேதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்ற விழாவில்

பாலவிகாஸ் இரண்டாம் பிரிவில் 35 மாணவர்களுக்கும் மூன்றாம் பிரிவில் 17 மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் பகவானின் போட்டோ மற்றும் பகவானின் பாகவத வாகினி புத்தகம் வழங்கப்பட்டது.

மேலும் மாநில அளவில் நடைபெற்ற திறன் தேடல் நிகழ்ச்சியில் முதலிடம் பெற்ற மாணவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர் மேலும் மாவட்ட அளவில் நடைபெற்ற பாகவத வாகினி வினாடி வினா நிகழ்ச்சியில் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. இதில் பாலவிகாஸ் மாணவர்கள் குருமார்கள் பெற்றோர்கள் என 85 பேர் கலந்து கொண்டனர்.





# பள்ளிகளுக்கு சென்று கட்டுரை போட்டி சான்றிதழ்கள் வழங்குதல்

திருப்பூர் 16.1.25 **1549** சேவாதளத்தொண்டர்கள்

நமது அன்பு தெய்வம் பகவான் ஸ்ரீ சத்யசாய் பாபா அவர்களுடைய பெரும் கருணையினால் கடந்த அக்டோபர் 2024 பள்ளிகளுக்கான கட்டுரை போட்டி நடைபெற்றது. திருப்பூர் மாவட்டத்திலிருந்து 12 பள்ளியின் சார்பாக 1549 மாணவ மாணவியர் கலந்து கொண்டார்கள். மாவட்ட அளவில் முதல் மூன்று இடம் பெற்றவர்களுக்கு நமது நிறுவனத்தின் சார்பில் வழங்கப்பட்ட சான்றிதழ்களும் மெடல்களும் பள்ளிக்குச் சென்று வழங்கப்பட்டன. அது மட்டுமல்லாமல் 1549 மாணவ மாணவியருக்கும் கலந்து கொண்டதற்கான சான்றிதழ் அந்தந்த பள்ளிக்குச் சென்று ஒரு நினைவு பரிசோடு வழங்கப்பட்டது.



# பல்லக்கு சேவை

திருப்பூர் 13.1.25 **50** சேவாதளத்தொண்டர்கள்

நமது பகவானின் மார்கழி மாத பௌர்ணமி பல்லக்கு சேவை, அமராவதி பாளையம் சத்ய சாயி சேவா சமிதி சார்பில் 13/ 1 /2025 அன்று சிறப்பாக நடைபெற்றது. அதில் பாலவிகாஸ் மாணவர்கள் குருமார்கள் சமிதி உறுப்பினர்கள் என 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



## ஏகாதச ருத்ர பாராயணம்

திருப்பூர் 12.1.25 **25** சேவாதளத்தொண்டர்கள்

நம் பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் 100 வது பிறந்தநாள் வைபவத்தினை முன்னிட்டு 12.01.2025 ஞாயிற்றுக்கிழமை நம் பகவானின் பெருங்கருணையினால் மதியம் 01.30 மணிக்கு திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை, டி.வி.பட்டினம் ஸ்ரீ சத்ய சாய் மந்திரில் ஏகாதச ருத்ர பாராயணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 25 க்கும் மேற்பட்ட சாய் அன்பர்கள் கலந்து கொண்டு பகவானின் பேரருளினைப் பெற்றனர்.



# ராம கதா ரஸவாஹினி பாராயணம்

திருப்பூர் 31/12/2024 to 5/1/2025 **65** சேவாதளத்தொண்டர்கள்

நமது பகவானின் பெரும் கருணையினால் நல்லூர் பஜனா மண்டலியில் ஸ்வாமி அவர்கள் திருக் கரங்களால் எழுதிய இராமாயணம் அதாவது ராம கதா ரஸவாஹினி பாராயணம் 30.12.2024 முதல் 05.01.2025 வரை ஸப்தாஹ பாராயணமாக நடை பெற்றது. பாராயணம் நாள்தோரும் காலை 8.00 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரை நடை பெற்றது. பாராயணம் முறைப் படி சீதா விவாஹம், ராம பட்டாபிஷேகம் ஆகியவை நடை பெற்றது.

பாராயணத்தில் நாள் தோறும் சுமார் 15 முதல் 20 நபர்கள் கலந்து கொண்டு பாராயணத்தை மிகவும் சிரத்தையுடன் படித்தார்கள். பாராயணத்தின் இறுதி நாள் ராம பட்டாபிஷேக வைபவத்தில் சுமார் 50 பக்தர்கள் கலந்து கொண்டு வைபவத்தை சிறப்பித்தார்கள். மாவட்டத்தலைவர் அவர்கள் சிறப்புரையாற்றி வைபவத்தை நிறைவு செய்தார்கள்.

அனைவருக்கும் மஹா பிரசாதம் வழங்கப்பட்டது. இந்த வைபவ மானது பகவானின் 100வது பிறந்த நாள் சமர்ப்பணமாக நல்லூர் பஜனா மண்டலி உறுப்பினர்களால் பகவானின் பாதங்களில் சமர்ப்பிக்கப்பட்டது.



# விளக்கு பூஜை

திருப்பூர் 24.1.25 **115** சேவாதளத்தொண்டர்கள்

மாநில தலைமையின் அறிவுறுத்தலின் பேரில் மாநிலம் முழுவதும் நடைபெற்ற விளக்கு பூஜை நிகழ்ச்சியானது திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து சமிதிகளின் சார்பிலும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்டத்தில் உள்ள அனைத்து சத்ய சாய் சேவா சமிதிகளின் சார்பிலும் பக்தர்கள் பங்கு பெற்று உலக நன்மைக்காக பிரார்த்தனை செய்தார்கள்.

சமிதி வாரியாக பங்கேற்றவர்கள் விவரங்கள் கீழ்வருமாறு :
ராம் நகர் சமிதி : 18, காந்திநகர் சமிதி: 20, முத்துநகர் சமிதி : 5, பல்லடம் யூனிட் 2 சமிதி : 5, உடுமலைப்பேட்டை - 18, சத்யா காலனி - 10, குளத்துப்பாளையம் சமிதி - 37, அமராவதி பாளையம் சமிதி - 2
மொத்தம் : 115 உறுப்பினர்கள்.





# சாதனா முகாம்

திருப்பூர் | 27.1.25 | 60 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் ஆசிர்வாதத்தால் 26 /1/ 2025 ஞாயிற்றுக்கிழமை, திருப்பூர் மாவட்டம் மங்கலம் பகுதியில் அமைந்துள்ள காளிபாளையம் கிராமத்தில் ராயபுரம் சமிதி சார்பில் சாதனா முகம் சிறப்பாக நடைபெற்றது.

இந்த சாதனா முகாமில்
1. சாயி இளைஞர்கள் சார்பில் மரக்கன்றுகள் நடப்பட்டது.
2. பாலவிகாஸ் குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது.
3. பாலவிகாஸ் பெற்றோர்களுக்கு குழந்தை வளர்ப்பிற்கான வழிகாட்டுதல்கள் நிகழ்ச்சி நடைபெற்றது.
4. கிராமத்தில் கோலப்போட்டி நடத்தப்பட்டது.
5. நாராயண சேவை நடைபெற்றது.
6. கோலப்போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் அனைத்து பாலவிகாஸ் குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

இந்த சாதனா முகாமில் சாய் இளைஞர்கள் சமிதி உறுப்பினர்கள் பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் அவர்கள் பெற்றோர்கள் சமிதி பொறுப்பாளர்கள் என 60 பேர் கலந்து கொண்டனர்.

## நாராயண சேவை

திருப்பூர் 26.1.25 **182** பயனாளிகள்

நமது அன்பு தெய்வம் பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களுடைய பெரும் கருணையினால் திருப்பூர் ராம்நகர் ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதி சார்பில் பிரதி மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை சாய் இளைஞர்கள் தாங்களாகவே முன்வந்து அதிகாலையில் இருந்தே உணவை தயாரித்து பக்குவமாக வாழை இலையிலே கட்டி ஒவ்வொரு நாராயணாவுக்கும் சென்று நேரில் கொடுத்து வருகிறார்கள். ஜனவரி 26 2025 ஞாயிற்றுக்கிழமை 182 அன்பர்களுக்கு நாராயண சேவை நடைபெற்றது.

# திருவிளக்கு பூஜை

திருப்பூர் 31.1.25 **115** சேவாதளத்தொண்டர்கள்

நம் அன்பு தெய்வம் பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா அவர்களின் நூறாவது பிறந்த தின ஜன்மோத்ஸவ கொண்டாட்டங்களின் ஒரு அம்சமாக, நமது திருப்பூர் மாவட்டத்தில் 100 கோவில்களில் திருவிளக்கு பூஜை செய்வது என முடிவு செய்யப்பட்டு, முதல் கோவிலாக காந்திநகர் சமிதி சார்பாக அண்ணா காலனி பகுதியில் உள்ள ஸ்ரீ அருள்மிகு பாலமுருகன் திருக்கோவிலில் விளக்கு பூஜை வெகு சீரும், சிறப்புமாக நடைபெற்றது.

மேற்படி திருவிளக்கு பூஜையில் 75 பெண்கள் கலந்துகொண்டும், பார்வையாளர்கள், பக்தர்கள் என சுமார் 30க்கும் மேற்பட்டவர்களும், 10 சேவாதள தொண்டர்களும் கலந்து கொண்டனர்.

# இலவச கண் சிகிச்சை முகாம்

திருப்பூர் 5.1.25 **236** பயனாளிகள்

நமது அன்பு தெய்வம் பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களின் பரிபூரண ஆசீர்வாதத்தால் பிரதி மாதம் நடைபெறும் இலவச கண் பரிசோதனை முகாம் 05-1-2025 அன்று, ஸ்ரீ சத்ய சாயி சேவா மையம் ராம் நகர், பி.என் ரோட்டில் சிறப்பாக நடைபெற்றது. பரிசோதனை செய்யப்பட்ட நோயாளிகள் 236, அறுவை சிகிச்சைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் 41, கண் கண்ணாடி வழங்கப்பட்டது 96.



## கண் பரிசோதனை முகாம்

ஸ்ரீசத்ய சாய் சேவா நிறுவனங்கள் சார்பில், திருப்பூர், பி.என்., ரோடு ஸ்ரீசத்ய சாய் சேவா மையத்தில் நேற்று சிறப்பு கண் பரி சோதனை முகாம் நடந் தது. மொத்தம், 236 பேர் பங்கேற்று கண் பரிசோதனை செய்து கொண்டனர். அவர்களில், 41 பேருக்கு கண் புரை அறுவை சிகிச்சைக்கு பரிந் துரைக்கப்பட்டது. மேலும், 96 பேருக்கு, கண் கண்ணாடி வழங்கப்பட்டது.

# கருணை இல்லம் சென்று சேவை

திருப்பூர் | 5.1.25 | 30 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையால் 05-01-2025 அன்று தமிழா கருணை இல்லத்தில் காலை 10 மணிக்கு சிறப்பு பஜன், அதைத்தொடர்ந்து மங்கள ஆரத்தி பின் அங்குள்ள முதியவர்களுக்கு போர்வைகள், துண்டு, புடவை ஆகியவை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர், சமிதி கன்வீனர்கள் மகிளா யுவதிகள் மற்றும் சாய் அன்பர்கள் என அனைவரும் கலந்து கொண்டனர்.



# மருத்தவ முகாம்

திருப்பூர் | 5, 12, 18 & 26/1/2025 | **186** பயனாளிகள்

ஒவ்வொரு வியாழன் தோறும் மாலை 5 முதல் 6 வரை நடக்கும் ஹோமியோபதி மற்றும் அலோபதி மருத்துவ முகாம்களில் மொத்தம்186 பேர் பங்கு கொண்டு பயன் பெற்றன



# ஏகாதச ருத்ரம்

மதுரை 26.1.25 36 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால், மதுரை மாவட்ட ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்களின் சார்பில் மதுரையை சுற்றி உள்ள பஞ்ச பூத ஸ்தலங்களிலும், பாடல் பெற்ற சிவாலயங்களிலும் ஏகாதச ருத்ரம் நடத்த திட்டமிடப்படுள்ளது. அதனடிப்படையில், அந்நிகழ்வின் தொடக்கமாக, மதுரை ஸ்ரீ சத்ய சாயி ஆனந்த நிலையத்தில் கடந்த ஜனவரி 26ம் தேதி காலை 8.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை ஏகாதச ருத்ரம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் ஆடவர் மற்றும் மகளிர் மொத்தம் 36 பேர் கலந்து கொண்டு ருத்ர பாராயணம் செய்தனர்.



## ஸ்ரீ சத்ய சாயி சத்ய நாராயண விரதம்

மதுரை | 19.1.25 | 140 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளின் தொடக்கமாக, மதுரை ஸ்ரீ ஸத்ய சாயி ஆனந்த நிலையத்தில், ஸ்ரீ சத்ய சாயி சத்ய நாராயண வ்ரத பூஜை, பகவானின் அனுக்ரஹத்துடனும், ஆசிகளுடனும் 19.01.2025 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

புட்டபர்த்தியில் நடைபெறும் ஸ்ரீ சத்ய சாயி சத்ய நாராயண பூஜையைப் போன்று, அதே முறையில் மதுரையிலும் நடைபெற்றது.

பங்கு பெற்ற ஒவ்வொருவருக்கும், லேமினேட் செய்யப்பட்ட பகவானின் சத்ய நாராயண புகைப்படம் உள்ளிட்ட பூஜைப்பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்பட்டது.

19.01.2025 காலை 09.00 மணிக்கு பிரசாந்தி கொடியேற்றத்துடன் தொடங்கப்பட்ட விழா, தொடர்ந்து வருகைப்பதிவு முடிவடைந்து, 09.30 மணிக்கு பிரேம ஜோதி ஏற்றுதல், வேதம் மற்றும் பஜனை தொடர்ந்தன. 09.45 மணிக்கு அனைவருக்கும் பூஜை பற்றிய குறிப்புகளின் விளக்கம் வழங்கப்பட்டு, மிகச் சரியாக 10.00 மணிக்கு பூஜை தொடங்கி பகல் 12.45 மணிக்கு முடிவடைந்தது.

பூஜையின் ஒவ்வொரு பகுதியிலும், அப்பகுதியின் பொருள்

மற்றும் அவற்றை ஏன் செய்கிறோம், போன்ற விளக்கங்கள் அளித்தது மிகச் சிறப்பாக அமைந்தது.






# வேர்களை வணங்கும் விழுதுகள்

**மதுரை** 14.1.25 **10** சேவாதளத்தொண்டர்கள்

மதுரை கிழக்கு, ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் சார்பில், சமிதியின் 70 வயது கடந்த முன்னாள் பொறுப்பாளர்கள், தீவிர பணியாளர் மற்றும் உறுப்பினர்களை கௌரவிக்கும் விதமாக 'வேர்களை வணங்கும் விழுதுகள்' எனும் தலைப்பில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

சமிதி இளையோர், மூத்தோர் இல்லம் தேடி சென்று, சிறிது நேரம் பஜனை செய்து, பின்னர் மூத்தோரை வணங்கி பகவானின் பிரேம பிரசாதமாக அருளாடை மற்றும் நினைவு பரிசு வழங்கி ஆசி பெற்றனர்.

சமிதியின் 21 மூத்தோர்கள் பாராட்டி கௌராவிக்கப்பட்டனர்.





# போர்வை வழங்கும் நிகழ்ச்சி

திருச்சி | 1.1.25 | 45 பயனாளிகள் | 10 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெரும் கருணையினால் 1.1.25 ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு திருச்சி மாவட்டத்தை சேர்ந்த பாலக்குறிச்சி அருகில் உள்ள சீரங்கம் பட்டி கிராமத்தில் முதியவர்களுக்கு போர்வை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஆண்கள் 15 பெண்கள் 30 மொத்தம் 45 நபர்களுக்கு போர்வை வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் 5 ஆண் சேவாதள தொண்டர்களும் 5 மகிளா சேவாதள தொண்டர்களும் கலந்து கொண்டு மிகச் சிறப்பாக சேவை புரிந்தனர்





# மெகா நகர சங்கீர்த்தனம்

திருச்சி 12.1.25 **160** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெரும் கருணையினால் மார்கழி திருவாதிரை நன்னாளில் 12.1.24 அன்று ஸ்ரீரங்கம் அருணா நகர் சத்ய சாயி ஆன்மீக மையத்தில் அனைத்து சமிதியினரும் கலந்து கொண்ட மெகா நகர சங்கீர்த்தனம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கைலாய வாத்தியம் இசைத்திட நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் சுவாமியின் திக் விஜயம் பல்லக்கில் புறப்பட்டது காண கண் கொள்ளா காட்சியாக இருந்தது. இதில் 160 பக்தர்கள் கலந்து கொண்டனர்





# சேவா வாணி




எதிர் வரும் மாதங்களில் தங்கள் மாவட்ட முக்கிய நிகழ்வுகள் இந்த மின் துணை இதழில் இடம் பெற, தெளிவான புகைப்படங்களுடன், தமிழில் நிகழ்ச்சி பற்றிய சிறு குறிப்புடன், மாவட்டத் தலைவர் வழியாக ssssotnreporting@gmail.com முகவரிக்கு அஞ்சல் அனுப்பவும்.

ஸ்ரீ சத்ய சாய் தமிழ்

Sri Sathya Sai Media Centre

Prasanthi Connect

**ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)**

**தமிழ்நாடு - தெற்கு**